பக்கங்கள்: 12
விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 06 புதன்கிழமை 20.03.2019 கதிர் 136

இனிது ரகசியம் அல்ல!

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராகப் பெரும்பாலும் கோட்டாபய ராஜபக்ஷதான் நிறுத்தப்படுவார் என்ற செய்தி வெளியானதும் எங்கள் அரசியல்வாதிகள் பலரின் அடி வயிறு கலங்கத் தொடங்கி விட்டதாகத் தகவல். பக்கம் 02 »

சிக்கினார் ஐ.ஜி.பி.!

கொழும்பு, மார்ச் 20
ஜனாதிபதி கொலைச் சதி விவகாரத்தில் ஆராயப்பட்ட ஒலிநாடா ஒன்றில் உள்ள குரல் பக்கம் 11 »

இன்று கடும் வெப்பம்!

கொழும்பு, மார்ச் 20
குருணாகலை, புத்தளம், மன்னார், கம்பஹா ஆகிய மாவட்டங்களில் இன்று கடும் வெப்பத்துடன்கூடிய காலநிலை நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

எனவே, அதிக வெப்பம் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறும், அதிக நீர் பருகுவதுடன் நிழலான இடங்களில் தங்கியிருக்கு பக்கம் 11 »

கிழக்கை அதிர வைத்த மக்களின் பேரெழுச்சி!

சர்வதேசத்திடம் நீதி கோரி ஓரணியில் திரண்டனர் உறவுகள்

மட்டக்களப்பு, மார்ச் 20
தமிழின அழிப்புக்குச் சர்வதேச விசாரணையே வேண்டும், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை அரசுக்கு மீளவும் கால அவகாசம் வழங்கப்படக்கூடாது என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுச் செவ்வாய்க்கிழமை கிழக்கில் பெரும் மக்கள் எழுச்சிப் பேரணி இடம்பெற்றது.

காணாமல் போனவர்களின் உறவுகளால் அழைப்பு விடுக்கப்பட்ட இந்த எழுச்சிப் பேரணி நேற்றுக் காலையில் மட்டக்களப்பில் பேரெழுச்சியாக ஆரம்பித்தது. கதவடைப்புப் போராட்டத்தால் கிழக்கு முடங்கியது. பக்கம் 11 »

கிழக்கு நேற்று முடங்கியது வடக்கிலும் கடையடைப்பு



மட்டக்களப்பு, மார்ச் 20
தமிழின அழிப்புக்கு நீதி கோரியும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு மேலும் கால அவகாசம் வழங்கக்கூடாது என பக்கம் 11 »

முஜிபுர் ரஹ்மானுக்கு கொலை அச்சுறுத்தல்!

கொழும்பு, மார்ச் 20
தனது உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குற்றப்புலனாய்வுப் பிரிவில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.

இது குறித்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டுள்ள அவர், பக்கம் 11 »

யாழ். நகரில் கழிவகற்றலுக்கு ட்ரக் வழங்குகின்றது ஜப்பான்

ஒப்பந்தம் நேற்றுக் கைச்சாத்து

கொழும்பு, மார்ச் 20
யாழ்ப்பாணத்தில் கழிவு அகற்றும் நடவடிக்கைகளுக்காக மீள்புதுப்பிக்கப்பட்ட ட்ரக் வண்டிகளை வழங்க ஜப்பானிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. பக்கம் 11 »

அன்னை பூபதிக்கு நேற்று மட்டக்களப்பில் அஞ்சலி

மட்டக்களப்பு, மார்ச் 20
தியாக தீபம் அன்னை பூபதியின் 31 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழ்த் பக்கம் 11 »

ஜெனீவாவில் இருந்தவாறு நேற்று ரணிலை எச்சரித்தார் சுமந்திரன்!

இதனையடுத்து பிரேரணை வரைவில் இலங்கை திருத்தம் கோரும் முயற்சியைக் கைவிட்டது

கொழும்பு, மார்ச் 20
ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள பிரேரணை வரைவில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரச தரப்புப் பிரதிநிதிகள் மேற்கொண்ட கடும் முயற்சி – பகீரதப் பிரயத்தனம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனின் எச்சரிக்கையை அடுத்துக் கைவிடப்பட்டதாக ஜெனீவாவிலிருந்து நேற்றிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன. பக்கம் 11 »

ஏமாற்றிவிட்டார் மைத்திரி!

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று விசனம்

மட்டக்களப்பு, மார்ச் 20
வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தை உள்ளூர்ப் பொறிமுறை ஊடாகத் தீர்க்கப்போவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளமை பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமலாக் பக்கம் 11 »

ஐ.நா. மனித உரிமை ஆணையரை ஜெனீவாவில் சந்தித்தார் சுமந்திரன்

புதிய பிரேரணை குறித்து ஆராய்வு

ஜெனீவா, மார்ச் 20
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சலெட் அம்மையாரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் நேற்று நேரில் சந்தித்துப் பேசினார்.

இதன்போது ஐ.நா. மனிதஉரிமைகள்கவுன்ஸிலில் கொண்டரப்படவுள்ள புதியபிரேரணைதொடர்பில் கலந்துரை பக்கம் 11 »

பிரிட்டனில் இலங்கைத் தமிழர் கத்தியால் குத்திப் படுகொலை!

மனைவி பொலிஸாரால் கைது

லண்டன், மார்ச் 20
பிரிட்டனில் 57 வயதான இலங்கைத் தமிழரைக் கத்தியால் குத்தி கொலை செய்தார் பக்கம் 11 »

விளம்பரம் மற்றும் செய்தி தொடர்பு
kalaikkathirnews@gmail.com
https://kalaikathir.online

41 தமிழ் ஊடகவியலாளர்களை கொலை செய்த இலங்கை அரசு

கஜேந்திரகுமார் ஜெனீவாவில் குற்றச்சாட்டு

ஜெனீவா, மார்ச் 20

போர் நடந்த காலப்பகுதியில் இலங்கையில் கொல்லப்பட்ட 48 ஊடகவியலாளர்களுள் 41 பேர் இலங்கை அரசால் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் ஆவார்கள்.

இவ்வாறு நேற்று ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் உரையாற்றிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு: -

ஒரு மக்கள் குழுமமானது ஐ.நா. பட்டயத்தின் பிரகாரம், எதற்காகவும் பாராதீனப்படுத்தப்பட முடியாத தம் சுயநிர்ணய உரிமையை அனுபவிப்பதற்காக எந்தவொரு சட்டபூர்வ நடவடிக்கையையும் எடுப்பதற்கு அந்த மக்கள் கூட்டத்தினர் உரித்துடையவர்கள் என்பதை வியன்னா பிரகடனம் மற்றும் வியன்னா நிகழ்ச்சித் திட்டம் என்பன அங்கீகரிக்கின்றன.

இலங்கை அரசின் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை எதிர்கொண்டு நிற்கும் தமிழ்த் தேசமானது ஒருபோதும் பாராதீனப்படுத்தபடமுடியாத தம் சுயநிர்ணய உரிமையை அடைவதற்காக இலங்கையில் தொடர்ந்தும் போராடிக்கொண்டிருக்கிறது.

இலங்கை அரசானது வன்முறையைக் கையிலெடுத்தபோது அதற்கான எதிர்வினையாக தமிழர் தரப்பும் ஆயுதத்தைக் கையில் எடுக்கநேர்ந்தது.

ஆனால் அதேவேளை, தமிழ் விடுதலை அமைப்பை மட்டுமன்றி, தனது பார்வையில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்துக்கு ஆதரவு வழங்கியவர்கள் எனக் கருதப்படும் தனி நபர்கள் மற்றும் அமைப்புகள் என அனைவரையும் இலங்கை அரசானது தனது இலக்காகக் கருதியது.

இப்படியானவர்களுள் ஊடக அமைப்புக்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத்தொழிலாளர்கள் ஆகியோரே பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

போர் நடந்த காலப்பகுதியில் இலங்கையில் கொல்லப்பட்ட 48 ஊடகவியலாளர்களுள் 41 பேர் இலங்கை அரசால் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் ஆவார்கள். தமிழர்களல்லாத ஏனைய அந்த 7 ஊடகவியலாளர்களில் ஆகக்குறைந்தது இரு ஊடகவியலாளார்கள், தமிழர்கள் மீதான அரச ஒடுக்குமுறையை வெளிப்படுத்தியமைக்காக அரசினால் கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

தமிழ்த்தந்தி எனப்படும் ஊடகநிறுவனம் இலங்கை அரசின் ஆகப்பிந்திய இலக்காக அமைந்துள்ளது. தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடிய மாவீரர் ஒருவர் பற்றிய கட்டுரை ஒன்றை பிரசுரித்தமைக்காக அவர்கள் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினால் அச்சுறுத்தப்படதோடு சட்ட நடவடிக்கைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என இந்தச் சபைக்கு இலங்கை அரசு உறுதியளித்துள்ள நிலையிலும் கூட பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் இந்த நடவடிக்கை இடம்பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

சுயநிர்ணய உரிமையை வெறுமனே ஒரு குறியீட்டுப்பொருளாக மட்டும் ஐக்கிய நாடுகளும் இந்த அவையும் தொடர்ந்தும் அணுகுமேயானால் சுயநிர்ணய உரிமைக்காக உண்மையில் போராடிக்கொண்டிருக்கின்ற அனைவரும் தொடர்ந்தும் இலக்குவைக்கப்படுவார்கள் என்பதை இங்கு சுட்டிக்காட்டுகின்றேன் - என்றார். (ஐ)

மொட்டுக் கட்சி விரைவில் வடக்கு கிழக்கிலும் மலரும்

அமைப்பாளர் பஸில் நம்பிக்கை

கொழும்பு, மார்ச் 20

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆரம்பித்துள்ள 'கிராமத்துடன் கலந்துரையாடல்' என்ற வேலைதிட்டத்தின் ஊடாக அடுத்த மூன்று மாதத்திற்குள் தமது கட்சி வடக்கு, கிழக்கு மக்களையும் நெருங்கி அரவணைத்துக் கொள்ளும் என அக்கட்சியின் அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கட்சியின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

ஆசிரியர்கள் மற்றும் இளைஞர், யுவதிகளின் பிரச்சினைகள், கஷ்ட பிரதேசத்தின் அபிவிருத்தி, மக்களின் தத்தமது இடங்களில் வாழும் உரிமை வசதி, விதவைகளுக்கு சுயதொழில் வாய்ப்பு பெற்றுக் கொடுத்தல், தனியார் துறை நிறுவனங்களின் தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல், சூரிய மின்சக்தி மற்றும் காற்று மின்சக்தி பாவனைகளை அதிகரித்தல், பிராந்திய அபிவிருத்தி போன்றவற்றை அறிந்து அச்செயற்றிட்டங்களை தமது கட்சி முன்னெடுக்கும் என்றும் அவர் கூறினார்.

வடக்கு கிழக்கில் உள்ள மக்களின் கருத்துக்களை அறிந்து அவற்றுக்கு முன்னுரிமை கொடுக்கப்படல் வேண்டும். அந்த மக்களின் கருத்துக்களையும் எதிர்பார்ப்புக்களையும் எந்த அரசாங்கத்தாலும் செயற்படுத்த முடியவில்லை.

எனினும் எங்கள் முயற்சிகளுக்கு வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கின்ற மக்கள் ஒத்துழைப்பார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கிராமத்துடன் கலந்துரையாடல் வேலைத்திட்டத்தின் மூலம் அந்தந்தப் பகுதிகளுக்கு சென்று அவர்களுடன் கலந்து பேசத் தயாராக இருக்கிறோம். - என்றார் அவர்.

குப்பைக்கு எதிராக நேற்று கொழும்பில் போராட்டம்!

புத்தளம் மக்கள் படையெடுப்பு

கொழும்பு, மார்ச் 20

புத்தளத்திற்கு இம்மாதம் 22ஆம் திகதி வருகை தர திட்டமிட்டிருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அதற்கிடையில் அறுவைக்காட்டு குப்பை திட்டத்திற்கு உறுதியான முடிவு தர வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் தமது விஜயத்தை அவர் மீள் பரிசீலனை செய்ய வேண்டிய நிலையே ஏற்படும்.

- இவ்வாறு கொழும்பில் குப்பைக்கு எதிராக பேரணி நடத்திய அமைப்பினர் எச்சரிக்கை விடுத்தனர்.

நேற்றுக் காலை புத்தளத்திலிருந்து சுமார் 25 பஸ்களிலும் வேறு பல வாகனங்களிலும் கொழும்பு வந்து காலி முகத்திடலுக்கு முன்னாள் ஆர்ப்பாட்டம் செய்த புத்தளம் மாவட்ட மக்களின் பேரணியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் என்ற இன பேதமின்றியும், கட்சி வேறுபாடுகளின்றியும் மத குருமார்கள் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

புத்தளம் குப்பைக்கு எதிரான சுலோக அட்டைகளையும், பதாதைகளையும் தாங்கியிருந்த இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் கொழும்பு காலி முகத்திடலில் ஓர் அந்தத்திலிருந்து மறு அந்தம் வரை கோசமிட்டு ஊர்வலமாக சென்றனர்.

பொலிஸாரும், விசேட அதிரடி படையினரும் அந்த பிரதேசத்தில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டு இருந்தமையுடன், நீர்த்தாரை பிரயோக வண்டிகளுடன் தயாராகவும் இருந்தனர். காலை 9 மணிக்கு தொடங்கிய இந்த ஆர்ப்பாட்டம் சுமார் 04 மணித்தியாலமாக நீடித்தது.

பின்னர், மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய 07 பேர் கொண்ட குழு ஜனாதிபதி செயலகத்திற்கு சென்று மேலதிக செயலாளர் சமந்தி கருணாதாசவிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

புத்தளத்தின் நிலைமை தொடர்பில் அவர்கள் அங்கு விளக்கியமையுடன் இந்த திட்டத்தை ஜனாதிபதி நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத் தினர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் கருத்த தெரிவித்த மேல் மாகாண சபை உறுப்பினர் ஏ.ஜெ.எம். பாயிஸ் -

தாங்கள் வழங்கிய மகஜர் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் ஜனாதிபதியுடன் சந்திப்பொன்றுக்கு நேரம் ஒதுக்கி தருமாறு கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் சர்வமத குருமார், செயற்பாட்டாளர் இப்லால் மரைக்கார், ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் முக்கியஸ்தர் மௌலவி மிப்லால், மேல் மாகாண சபை உறுப்பினர் பாயிஸ், நஸ்லியா காதர் மற்றும் 'கிளீன் புத்தளம்' அமைப்பினரும் பங்கேற்றிருந்தனர்.

பின்னர், ஜனாதிபதி செயலகத்திலிருந்து பேரணியாக அலரி மாளிக்கைக்கு இவர்கள் நடந்து சென்றனர்.

குப்பைக்கு எதிரான சமூக செயற்பாட்டாளர்கள் அலரி மாளிகையில் பிரதமரின் உதவிச் செயலாளர் குசாரி, திட்டப்பணிப்பாளர் வன்னி நாயக்க ஆகியோருடன் சுமார் 1 மணித்தியாலயம் வரையில் பேச்சு நடத்தி, நிலைமைகளை எடுத்துக் கூறி மகஜர் ஒன்றினையும் கையளித்தனர்.

இவைகளை கேட்டறிந்த பிரதமரின் உயர் அதிகாரிகள் இது தொடர்பில் இன்றே அறிக்கை ஒன்றை தயாரித்து மகஜரையும் இணைத்து பிரதமரின் செயலாளரிடம் பூர்வாங்க அறிக்கையாகக் கையளிப்பதாகவும், பிரதமர், அமைச்சர் சம்பிக்க ரணவக்கவுடன் புத்தளம் சமூகச் செயற்பாட்டாளர்களை சந்திப்பொன்றுக்கு ஏற்பாடு செய்து தருவதாகவும் உறுதியளித்தனர்.

இந்தச் சந்திப்பு மிகவும் சாதகமாக அமைந்திருந்ததாக சந்திப்பில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர்.

இந்த ஊர்வலத்தில் புத்தளத்தைச்சேர்ந்த அரசியல் பிரமுகர்களான முன்னாள் மாகாண சபை உறுப்பினர் நியாஸ், புத்தள நகர சபை உறுப்பினர்களான அலி சப்ரி, சிஹான், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் இல்யாஸ் மற்றும் மேல் மாகாண சபை உறுப்பினர் பாயிஸ், புத்தளம் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் சமூக நல விரும்பிகள், புத்தளம் கிளீன் அமைப்பினர், புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த பெண்கள் பலர் கலந்துகொண்டனர். (ஐ)

இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் பத்திரிகையாளர்கள். கோட்டாபயவை அல்ல, மஹிந்தவைச் சந்தித்தால் கூட செய்தியாக்கி விடுவோம். அவர்களைச் சந்திப்பதிலும், பேசுவதிலும் எங்களுக்கு எந்தத் தடுமாற்றமும் இல்லை, ஒளிவுமறைவும் இல்லை.

ஆனால், இதுவரை 'நெகடிவ் பொலிட்டிக்ஸ்' செய்த தமிழ் அரசியல்வாதிகளின் நிலை அதுவல்லவே? கோட்டாபாயவுடன் தொடர்பாடல் வைத்தால் - அது தமது மக்களுக்குத் தெரிய வந்தால் - எல்லாம் குட்டிச் சுவராகிக் கெட்டபெயராகிவிடும் என்ற அச்சம் ஒரு பக்கம்.

தொடர்பு வைக்காமல் இருந்து, பிறகு கோட்டா ஜனாதிபதியாகி விட்டால், பிற்பாடு தொடர்பு வைப்பதோ, நம்பிக்கையைப் பெறுவதோ இலகுவானதல்ல என்ற யதார்த்தம் மறுபுறம்.

அதனால், சத்தம் சந்தடியின்றி கோட்டாவைச் சந்தித்துப் பேசி ஒரு உறவாடல் தொடர்பை வைத்துக் கொள்வோம் என்று நம் அரசியல்வாதிகள் சிலர் நைஸாக - சத்தம் சந்தடியின்றி - காய் நகர்த்துகின்றார்கள் என்று தகவல். தங்கள் தொடர்புகள் மூலம் கோட்டாவை எட்டுவதற்கு முயலும் தமிழ் அரசியல்வாதிகள் - குறிப்பாக வடக்கு அரசியல்வாதிகள் - சிலரின் பெயர், விவரங்கள் கிடைத்துள்ளன.

நல்லது. சந்திக்கட்டும். பேசட்டும். குசலம் விசாரிக்கட்டும். எது, எப்படியென்றாலும் விடயம் மலிந்தால் சந்தைக்கு வந்துதானேயாகும்...?

தேசியம் பேசும் நம் தமிழ் அரசியல்வாதிகள் பலர் ஏற்கனவே கோட்டாவுக்கு சமரச சமிஞ்ஞை அனுப்பி விட்டனர் என்றும் செய்தி.

ஆனால், யார் என்றாலும் வெளிப்படையாகத் தன்னை வந்து சந்தித்துப் பேசி, விமர்சிக்கும் பிரமுகர்களையே நேர்முகம் கண்டு உரையாடுவதற்கு கோட்டாபய விரும்புகின்றார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் அவருடனும் கோட்டாபாயவுடனும் சேர்ந்து நின்று அரசியல் பண்ணி விட்டு, ஆட்சி மாறியதும் - காட்சி மாறியதும் - தமது போக்கையும் மாற்றிக் கொண்ட சில அரசியல்வாதிகளும் மீண்டும் கோட்டாவின் பாதம் பணியத் தயாராகி விட்டனர் என்றும் பேச்சு.

கோட்டாபய என்ன திட்டம் வைத்திருக்கின்றார், கருத்து நிலைப்பாடு கொண்டிருக்கின்றார் என்பது தெரியவில்லை. ஆனால் வடக்கு, கிழக்கு அரசியல் தொடர்பாக மஹிந்த ராஜபக்ஷ தெளிவான திட்டங்கள் சிலவற்றை வைத்திருக்கின்றார் என்று தெரிகின்றது. வடக்கு தமிழ் அரசியல்வாதிகள் ஒவ்வொருவர் தொடர்பிலும் தனித்தனிக் கணக் கீடும் அளவீடும் அவர் கொண்டிருக்கின்றார் என்றும் -

அதிகாரம் கைமாறினால் வடக்கு, கிழக்குத் தொடர்பில் அவரது தரப்பின் அதிரடிக் காய் நகர்த்தல்கள் அதிசயிக்கத்தக்கவையாகவும், பிரமிக்கத் தக்கவையாகவும் இருக்கும் என்றும் -

அவருக்கு நம்பிக்கையான சில தரப்புகள் கூறுகின்றன.

எது, எப்படி என்றாலும் -

கோட்டா வந்தாலும், மைத்திரியே நீடித்தாலும் அல்லது ரணிலே அதிகாரத்தைப் பிடித்தாலும், பதவிக்கு வருபவரைத் தாஜா செய்து அரசியல் வளம் தேடும் பல தந்திரசாலி அரசியல்வாதிகளுடம் நம் மத்தியில் உள்ளனர்.

என்ன அதிகார மாற்றம் வந்தாலும், பிழைக்கத் தெரிந்த அவர்கள் பிழைத்துக் கொள்வார்கள். ஆனால் அப்பாவிப் பொது மக்கள்தாம் பாவம். ஆட்சி மாற்றமும், அதிகாரக் கைமாறல்களும் அவர்களுக்கு எந்த விடிவையும் தரப்போவதில்லை என்பது மட்டும் நிச்சயம்.

- மின்னல் -

படையினர் தவறிழைக்கவில்லை எந்த விசாரணைக்கும் நாம் தயார்!

இராணுவத் தளபதி இறுமாப்பு



கொழும்பு, மார்ச் 20

போரின்போது இலங்கைப் படையினர் எந்தத் தவறையும் செய்யவில்லை என்று தெரிவித்துள்ள இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க, தமது படையினரைப் பாதுகாப்பதற்காக எந்தவொரு விசாரணைக்கும் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளார்.

வெலிகமவில் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

எந்தவொரு விசாரணையை எதிர்கொள்வதற்கும் நாங்கள் அச்சம் கொள்ளவில்லை. ஏனென்றால் நாங்கள் எந்தக் குற்றமும் இழைக்கவில்லை.

எந்தவொரு போரிலுமே பொது மக்களுக்கு இழப்பு ஏற்படும். அது கடினமான உண்மை. அது இல்லாமல் போரை நடத்த முடியாது.

அதற்காக, நாங்கள் போரின் போது அதனைச் செய்தோம் என்று அர்த்தமில்லை.

கடந்த காலத்தைத் தோண்டக் கூடாது. கடந்த 10 ஆண்டுகளில் நடந்துள்ள நல்ல விடயங்களைப் பார்க்கவேண்டும்.

அனைத்துலக விசாரணை தேவையில்லை. எமது நீதித்துறைக்கு அதற்கான தகுதி உள்ளது – என்றார். (ஐ)

நாலக டி சில்வாவுக்கு மீண்டும் விளக்கமறியல்

பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வாவின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று அவரை மீண்டும் முன்னிலைப்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அவரை எதிர்வரும் மார்ச் மாதம் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டினார் என்ற குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

சமலின் பதவி விலகலை ஏற்றுள்ளார் ஜனாதிபதி

கொழும்பு, மார்ச் 20

அரசமைப்புப் பேரவையில் இருந்து, விலகுவதாக சமல் ராஜபக்ஷ அனுப்பிய கடிதத்தை ஏற்றுக் கொண்டுள்ளார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசமைப்புப் பேரவைக்கு அறிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் ஜனாதிபதியின் இந்த முடிவு அதிகாரபூர்வமாகத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனும் இணைந்து, சமல் ராஜபக்ஷவை அரசமைப்புப் பேரவை உறுப்பினராக நியமிக்கப் பரிந்துரைத்திருந்தனர்.

எனினும், ஆட்சிக் குழப்பங்களுக்குப் பின்னர், மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவராகி, அரசமைப்புப் பேரவையின் உறுப்பினரானதும், கடந்த ஜனவரி மாதம் பேரவையின் உறுப்பினர் பதவியில் இருந்து விலகுவதாக ஜனாதிபதிக்கு, சமல் ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

எனினும், மூன்று மாதங்களுக்குப் பின்னரே இந்தப் பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக் கொள்வதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இந்த நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும் இணைந்து, அரசமைப்புப் பேரவைக்கான நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டிய நிலையில் உள்ளனர்.

முன்னதாக, இரா.சம்பந்தனை மீண்டும் அரசமைப்புப் பேரவைக்கு நியமிக்க இணக்கம் ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, சபாநாயகர் கரு ஜெயசூரியவின் தலைமையில் அரசமைப்புப் பேரவையின் அடுத்த கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

தீவிர அரசியலில் பைஸர்!

கொழும்பு, மார்ச் 20

முன்னாள் மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் பைஸர் முஸ்தபா, மீண்டும் தீவிர அரசியலில் குதித்துள்ளார்.

இவர், மத்திய கொழும்பு தொகுதிக்கு உட்பட்ட பிரதேசங்களுக்குச் சென்று, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செயற்பாட்டாளர்கள், வேட்பாளர்கள், வாக்காளர்கள் மற்றும் ஆதரவாளர்களைச் சந்தித்துப் பேசி வருகின்றார்.

இதுதவிர, எதிர்வரும் காலங்களில் மக்கள் சந்திப்புக்களையும் பரந்தளவில் நடத்தத் திட்டமிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மேற்குத் தொகுதி அமைப்பாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான மாநகர எதிர்க்கட்சித் தலைவர் எச்.எம். மன்ஸில், கொழுப்பு மாநகர சபை உறுப்பினர் துஷார ஹேமந்த (மஞ்சு) ஆகியோரின் ஒத்துழைப்புடன் இச்சந்திப்புக்களை முன்னெடுக்கவுள்ளார்.

ஒக்டோபர் மாத அரசியல் சூழ்ச்சியின் பின்னர், பைஸர் முஸ்தப்பாவின் அரசியல் நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன. (ஐ)

தென்னிலங்கையில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ள இன்புளுவன்சா

கொழும்பு, மார்ச் 20

காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் இன்புளுவன்சா நோயின் தாக்கம் அதிகரித்துள்ளதாக தென் மாகாண சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காலி, கராப்பிட்டி, பலப்பிட்டி, எல்பிட்டி ஆகிய வைத்தியசாலைகளில் இன்புளுவன்சா நோய் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜீ.விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த நோயை தடுப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நோய் தொற்று ஏற்பட்டுள்ளமையை இனங்காணும் பொருட்டு மக்கள் அருகிலுள்ள வைத்தியசாலைக்கு சென்று, தங்களை பரிசோதனை செய்துக்கொள்வது சிறந்ததெனவும் ஜீ. விஜேசூரிய குறிப்பிட்டுள்ளார். (ஐ)

தடையின்றி மின்சாரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 20

நாட்டில் மின்சாரத் தடையின்றி, தொடர்ச்சியாக மின்விநியோகத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

செயலிழந்துள்ள நுரைச்சோலை லக்விஜய அனல்மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டாவது மின் பிறப்பாக்கியைத் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நுரைச்சோலை லக்விஜய அனல்மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டாவது மின்பிறப்பாக்கி நேற்றுமுன்தினம் மீண்டும் செயலிழந்தது.

இதனால் 270 மெகாவோல்ட் மின்சாரம் தேசிய கட்டமைப்புடன் இணைக்கப்படவில்லை. இதன் காரணமாக பல பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டது.

இந்த மின் உற்பத்தி நிலையத்தின் முதலாவது மின்பிறப்பாக்கி 2015 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதி வரை 495 நாள்கள் செயலிழந்திருந்தது.

இரண்டாவது மின்பிறப்பாக்கியும் திருத்தப்பணிகளுக்கு, நிறுத்தப்பட்டு கடந்த செப்ரெம்பர் மாதம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈச்சங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நேற்று கைது

வவுனியா, ஈச்சங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா ஈச்சங்குளம் பொலிஸ் பிரிவில் கடமையாற்றிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுபாஸ்குமார ஆரியரத்ன, பொலிஸ் உத்தியோகத்தர் விதான ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஈச்சங்குளம் பொலிஸ் பிரிவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை புதையல் தோண்டிய ஐவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களின் தொலைபேசி ஆய்வு விசாரணைகளின்போது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புதையல் தோண்டியவர்களுடன் தொலைபேசியில் உரையாடல் மேற்கொண்டமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில் ஈச்சங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு முல்லைத்தீவுப் பொலிஸ் தலைமை அலுவலகத்துக்கு உடனடி இடமாற்றம் வழங்கப்பட்டது. பொலிஸ் உத்தியோகத்தருக்கும் தலைமன்னார் பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் இருவரும் தமது கடமைகளைப் பொறுப்பேற்கச் செல்லவில்லை.

இதனையடுத்து நேற்று அதிகாலை ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி சுபாஸ்குமார ஆரியரத்ன பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய உத்தியோகத்தர் விதான ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, புதையல் தோண்ட முற்பட்ட சந்தேக நபர்கள் ஐவரையும் நேற்று முன் தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 1 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

இந்தியப் பிரஜை கைது!

கொழும்பு, மார்ச் 20

அறியப்படாத போதைப் பொருள் மற்றும் ஒரு வகை எண்ணெய் வகை என்பவற்றைத் தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில், பொலனறுவை – கந்துருவெல பஸ் தரிப்பிடத்தில் வைத்து, இந்தியப் பிரஜையொருவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

சுற்றுலா விஸாவில் இலங்கைக்கு வருகை தந்த, பெங்களூரைச் சேர்ந்த 35 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இந்தியப் பிரஜையை, பொலனறுவை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

ஹெரோய்னுடன் இளைஞன் வவுனியா சிறை அருகே கைது

வவுனியா, மார்ச் 20

வவுனியாவில் 3 கிராம் 910 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த ஒருவரைக் கைது செய்துள்ளோம் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை வவுனியா சிறைச்சாலைக்கு அருகில் சந்தேகத்திற்கிடமான முறையில் நின்றிருந்த இளைஞர் ஒருவர் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையப் போதை தடுப்புப் பிரிவினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸ் பொறுப்பதிகாரி உசாந்த தலைமையிலான குழுவினர் அந்த இளைஞனைச் சோதனை செய்தபோதே அவரிடமிருந்து ஹெரோய்ன் போதைப்பொருளை மீட்டனர்.

சம்பவத்தில் வவுனியா தேக்கவத்தை, பகுதியைச் சேர்ந்த 19 வயதான இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

அவர் மதில் ஊடாகச் சிறைச்சாலைக்குள் போதைப் பொருளை கடத்துவதற்காகவே நின்றிருந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ - 100)

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online

தமிழர் ஐக்கியத்துக்கான அழைப்பு காதில் விழுமா? அல்லது வீணாகுமா?

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்.

தமிழினம் நமது தேசத்தில் தப்பிப் பிழைத்து நிலைபெற்றிருந்தால்தான் அதன் உரிமை, கௌரவ வாழ்வு, விடுதலை, சுதந்திரம் பற்றி எல்லாம் நாம் பேசமுடியும்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கம்பன்கழக நிகழ்வில் இந்த விடயத்தை வெளிப்படையாகவும் அப்பட்டமாகவும் வெளிப்படுத்தியிருக்கின்றார் அமைச்சர் மனோ கணேசன்.

"சமஷ்டி வரலாம். இல்லையேல் தனிநாடே வரலாம்.வடக்கு - கிழக்கு இணையலாம், இணையாமல் போகலாம். அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் கூறப்பட்டவை நடைமுறைக்கு வரலாம், நடைமுறைக்கு வராமல் போகலாம்.

"இவை எல்லாவற்றுக்கும் முதல் நாங்கள் இந்த தேசத்தில் இருக்க வேண்டும். தமிழ் இருக்க வேண்டும். தமிழ் மொழி இருக்க வேண்டும். அந்த இருப்பை உறுதி செய்யாவிடில் நாம் அழிந்து போய் விடுவோம்.

"அந்த இருப்பை உறுதி செய்ய நாங்கள் ஐக்கியப்பட வேண்டும், ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். கட்சி பேதம் கடந்து, மத பேதம் கடந்து, பிரதேச பேதம் கடந்து, நாம் ஐக்கியப்பட்டுச் செயற்பட வேண்டும்."

இப்படி ஒரு வரலாற்றுக் கட்டாயத்தை - யதார்த்தப் புறவுண்மையை - யாழ் மண்ணில் நின்று கொண்டு உரைத்திருக்கின்றார் அமைச்சர் மனோ கணேசன்.

தமிழின் சிறப்புப் பேசும் கம்பன் விழாவில் தமிழினத்தின் இந்தக் கட்டாய நிலைமையை அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றமை முக்கியமானதாகும்.

நாம் - தமிழர்கள் - இழந்தவற்றை மீட்டெடுக்க வேண்டும். எமக்கான மொழி, கலை, கலாசாரம், பாரம்பரிய - பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாக்க வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக எமது மண் காப்பற்றப்பட வேண்டும்.

இலங்கைத் தீவின் பாரம்பரிய குடிகளான தமிழர்களுக்கு எதிராகப் பேரினவாதப் போக்குடைய பௌத்த, சிங்கள அரசுகள் முன்னெடுத்த - முன்னெடுத்து வருகின்ற - அரச அடக்குமுறை குரூரமான பல வடிவங்களைக் கொண்டது.

ஒரு புறம் அது அரச வன்முறையாகக் கட்டவிழ்ந்தது. மறுபுறம், தமிழினத்தின் தேசிய வாழ்வுக்கும் இருப்புக்கும் ஆதாரமான - அத்தியாவசியமான - அடித்தளங்களை, படிப்படியாகத் தகர்த்தழிப்பதன் மூலம் தமிழினத்தின் இருப்பையே சிதைத்து, இல்லாமலாக்கும் நாசகாரத் திட்டமாகவும் அது வெளிப்பட்டது; வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

பல முனைப்பட்ட - பல முகப்பட்ட - இந்த இனவழிப்பு நடவடிக்கையில் தமிழினத்தின் மையவிசையான - ஆன்மாவான - தமிழ்மொழி முதலில் இலக்கு வைக்கப்பட்டது. மொழி உரிமை பறிக்கப்பட்டது.

தொடர்ந்து கல்வி உரிமை, வேலைவாய்ப்பு, கௌரவ வாழ்வுக்கான உரிமை போன்றவை ஒவ்வொன்றாக இலக்கு வைத்து வீழ்த்தப்பட்டன. தமிழர்களின் பொருளாதார முறைமையே சூறையாடப்பட்டு நசுக்கப்பட்டது.

இறுதியாக, அவர்களின் பாரம்பரிய தாயகம் மீதான மண் உரிமையும், பண்பாட்டு உரிமைகளும் ஒவ்வொன்றாக ஏப்பமிடப்படும் அபாயகரச் சூழல் வெளிப்பட்டுள்ளது.

தமிழர்கள் ஓர் இனமாகத் தம்மை அடையாளப்படுத்துவதற்கும், தனித்துவமாக வாழ்வதற்கும் அடிப்படையான - அவசியமான - நில உரிமை மீதும், மண் உரிமை மீதும் இப்போது இறுதித் தாக்குதல் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது.

சிங்கள ஆளும் வர்க்கத்தின் இந்தக் குரூர முகத்தை அவர்களுக்கு மத்தியில் வாழும் அமைச்சர் மனோ கணேசன் நன்கு புரிந்து கொண்டிருக்கின்றார்.

சளைக்காது-களைக்காது-அஞ்சாது-அந்தக்கொடூரங்களுக்கு எதிராகக் குரல் கொடுத்து வரும் அவர், அந்த நயவஞ்சக நடவடிக்கைகளை எதிர்கொண்டு தமிழினமாய் நாம் எழுந்து நிற்பதற்கான அவசியத்தை - அதற்கான வழிமுறையை - எமது மண்ணில் வந்து நின்று எமக்கு நினைவூட்டியிருக்கின்றார்.

தமிழரின் இறைமையைக் கடைசி வரை காப்பாற்றிய சங்கிலி மன்னனின் நல்லூர் இராஜதானியில் வந்து நின்று கொண்டு மறத்தமிழனாக இந்த ஐக்கியத்தின் அவசியத்தை உணர்த்தியிருக்கின்றார் அமைச்சர் மனோ கணேசன்.

குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவும், பதவிகளுக்காகவும், தனிப்பட்ட விருப்பு - வெறுப்புக்களுக்காகவும், காழ்ப்புணர்வின் அடிப்படையிலும் கன்னை பிரிந்து நின்று, அரசியல் செய்யும் நமது தலைவர்களின் காதுகளில் இந்த ஆலோசனை - ஐக்கியத்துக்கான அழைப்பு - வீழுமா அல்லது புறக்குடத்தில் ஊற்றிய நீராக வீணாகுமா என்பதுதான் கேள்வி.

மனோ கணேசன் கூறுகின்றமைபோல தீர்வு எதுவாகவும் இருக்கட்டும். அது வந்தாலும் வரட்டும், வராமல் போனாலும் போகட்டும்.

ஆனால், தமிழினத்தின் - தமிழர்களின் - தனித்துவ வாழ்வையும், பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் காப்பதற்காகத் தமிழ் மண்ணையும், மொழியையும் நாம் முதலில் காப்பாற்ற வேண்டும்.

அதற்காக அவர் கூறுகின்றமை போல, மதம் கடந்து, கட்சி கடந்து, பிரதேச பேதம் கடந்து ஐக்கியப்படுவது காலத்தின் கட்டாயமாகும்.

தமிழ் மக்களின் நீதிக்காக தொடர்ந்து போராடுவோம்!

பிரிட்டன் எம்.பிக்கள் குழு உறுதி

லண்டன், மார்ச் 20

மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்களுக்கு நீதி கிடைப்பதற்குத் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கப்படும் என பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு அறிவித்துள்ளது.

பிரிட்டன் நாடாளுமன்றில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இது குறித்து கன்சர்வேட்டிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் றொபர்ட் ஹல்போன் கருத்து வெளியிடுகையில், தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதற்குத் தாம் தொடர்ந்தும் போராடுவோம். இந்த விடயம் பிரிட்டன் நாடாளுமன்றத்தில் பலமாக ஒலிக்கின்றது. இந்நிலையில், யுத்த காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் விசாரணை நடத்தப்படவேண்டும் - என்றார்.

இதேவேளை, இலங்கையில் நல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் இல்லை என்று, தமிழர்களுக்கான பிரிட்டன் அனைத்துக் கட்சிக் குழுவின் தலைவர் போல் ஸ்கல்லி குற்றம் சுமத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

வவுனியா மாவட்ட செயலகத்தில் தனிச் சிங்களத்தில் அறிவுறுத்தல்!

உடன் மாற்றுமாறு ரிஷாத் அதிரடி உத்தரவு



வவுனியா, மார்ச் 20

வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள காணி மாவட்ட பதிவகத்தில் கட்டண விவரங்கள் தனிச்சிங்கள மொழியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக அமைச்சர் ரிஷாத் பதியூதின் அதிரடி உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள காணி மாவட்ட பதிவகத்தில் காணிகளை விரைவாகப் பதிவு செய்யும் ஒருநாள் சேவையை நடைமுறைப்படுத்தும் ஆரம்ப நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கைத்தொழில், வர்த்தகம், நீண்டகால இடம்பெயர்ந்தோர், மீள்குடியேற்றம், கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் ரிஷாத் பதியூதின் மற்றும் வவுனியா மாவட்ட அரச அதிபர் ஐ.எம்.ஹனீபா உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

காணி மாவட்ட பதிவகத்தில் காணிகளை விரைவாகப் பதிவு செய்யும் ஒருநாள் சேவைக்குரிய கட்டண விவரங்கள் தனிச் சிங்கள மொழியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை தமிழ் மக்களிடையே பெரும் விசனத்தை உண்டுபண்ணியிருந்தது.

இவ்விடயம் அமைச்சர் ரிஷாத் பதியூத்தினின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இருமொழி பேசும் மக்களும் இணைந்து வாழும் பிரதேசமாக வவுனியா காணப்படுகின்றது. எனவே இந்தக் கட்டண விவரப் பட்டியலைத் தமிழ் மற்றும் சிங்களமொழிகளில் உடனடியாக மாற்றுமாறு திணைக்கள அதிகாரிக்கு அமைச்சர் உத்தரவு பிறப்பித்தார்.

(ஐ - 100)

சுதந்திரக் கட்சியின் அழிவுக்கு தவறான முடிவுகளே காரணம்

கூட்டு எதிரணி குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 20

தவறான தீர்மானங்களே சுதந்திரக் கட்சியின் அழிவுக்கு காரணம் என்று கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில், இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தை நாட்டு மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இதனாலேயே பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவை வழங்கினார்கள். இந்த வெற்றியை எம்மால் தொடர்ந்து தனித்து முன்னெடுத்துச் செல்ல முடியும்.

ஆனால் தற்போது பொதுஜன பெரமுனவும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் பரந்துப்பட்ட கூட்டணியமைத்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகச் செயற்பட வேண்டும் என்று இரண்டு தரப்பு தலைமைத்துவமும் எதிர்பார்க்கின்றமையை மதிக்கவேண்டும்.

ஆனால் இதற்கு சுதந்திரக் கட்சியின் ஒருதரப்பினர் தடைகளை ஏற்படுத்துகின்றார்கள். இன்று சுதந்திரக் கட்சியில் முக்கிய பொறுப்பில் உள்ளவர்கள் தற்காலிகமாகவே அரசியலில் செல்வாக்கு செலுத்துகின்றார்கள். இவர்கள் தங்களின் அடுத்த அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள சுதந்திரக் கட்சியின் கொள்கைக்கு எதிராக செயற்படுகின்றார்கள் -என்றார்.

அலரி மாளிகைக்குள் அமெ. அலுவலகமா?

விமலின் குற்றச்சாட்டை நிராகரிக்கிறது ஐ.தே.க.

கொழும்பு, மார்ச் 20

அமெரிக்காவின் மிலேனியம் சவால் அமைப்பின் பணியகம் ஒன்று அலரிமாளிகையில் அமைக்கப்பட்டுள்ளதாக கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ சுமத்திய குற்றச்சாட்டை, அமைச்சர் சாகல ரத்நாயக்க மறுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடந்த குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய விமல் வீரவன்ஸ, சிறிலங்கா பிரதமரின் அதிகாரபூர்வ வதிவிடமான அலரி மாளிகையில் அமெரிக்கா,மிலேனியம்சவால்அமைப்பின் செயலகத்தை அமைத்துள்ளது என்றும், கொழும்புத் துறைமுகத்தில் இருந்து திருகோணமலை வரை, 200 கி.மீ தூரத்துக்குச் சிறப்புப் பொருளாதார வலயம் அமைக்கப்பட்டு அங்கு அமெரிக்காவின் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் குற்றம்சாட்டியிருந்தார்.

இதற்குப் பதிலளித்து உரையாற்றிய அமைச்சர் சாகல ரத்நாயக்க-

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ பொய்யான தகவல்களைப் பரப்புவதை நிறுத்திக் கொள்ளவேண்டும்.

மிலேனியம் சவால் அமைப்போ அல்லது வேறெந்த அமெரிக்க முகவர் அமைப்போ, அலரி மாளிகையில் செயலகத்தை அமைக்கவில்லை.

பொய்களைச் சொல்வதற்கும் ஓர் எல்லை உள்ளது. ஊடகப் பரப்புரைக்காக, கற்பனைக் கதைகளைக் கட்டவிழ்த்து விடுகிறார் என்று அவர் தெரிவித்தார்.

(ஐ)

நாளை

21.03.2019
வியாழக்கிழமை
நட்சத்திரம்: உத்தரம் மரண பி.ப.02.25 வரை.
திதி : பூரணை காலை 07.45 வரை.
இராகுகாலம் : 01.47–03.17
சுப நேரம் : 07.47–09.17

கீரிமலை நகுலேஸ்வரபுரம் நிலம் சுவீகரிப்பு; தமிழ் எம்.பிக்கள் தடுத்து நிறுத்த வேண்டும்

ஆறு. திருமுருகன் அறிக்கையில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 20

கீரிமலை நகுலேஸ்வரபுரத்தில் சைவ மக்களின் நிலங்களை அரசு சுவீகரிக்க முயற்சி செய்வதும் ஆன்மீகச் சூழலை சுற்றுலா மையமாக அமைக்கத் திட்டமிட்டுள்ளமையும் அநீதியான செயல். இதனை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடன் தடுத்து நிறுத்த வேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவரும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவருமான கலாநிதி. ஆறு. திருமுருகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு :-

சரித்திர முக்கியத்துவம் மிக்க கீரிமலை நகுலேஸ்வரச் சூழலில் கீரிமலை காங்கேசன்துறை வீதியிலுள்ள கோவில்கள் தனியார் நிலங்கள், சமய நிறுவனங்களின் நிலங்களை கடந்த 25 ஆண்டுகளுக்கு மேல் உயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறி மக்களிடம் ஒப்படைக்காத அரசாங்கம் தற்போது அப்பிரதேசத்தை சுவீகரிக்கத் திட்டமிடுவது மிக அநீதியான செயலாகும்.

சித்தர்களின் சமாதிகள், சடையம்மா மடம், கிருஷ்ணன் கோவில், சிவன் கோவில், பாதாள கங்கை தீர்த்த சேத்திரம், கதிரையாண்டவர் கோவில் உட்பட அப்பாவி மக்களின் நிலத்தினை சுவீகரிக்கத் திட்டமிடுவது மிகத் துரோகமான செயலாகும். நீண்ட காலமாக வலிவடக்கு மக்கள் இப்பகுதியைக் கையளிக்குமாறு விடுத்த வேண்டுதலுக்கு அரசு செய்யும் கைமாறு இது தானா? இவ் விடயம் தொடர்பாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்து கலாசார அமைச்சர் இவ்விடயத்தில் உடன் அக்கறை எடுத்தல் அவசியமாகும். காங்கேசன் துறையில் ஹோட்டல் அமைத்து வாணிபம் செய்து வரும் அப்பாவி மக்களின் நிலங்கள் மற்றும் சுக்கிரவார திருகோண சத்திரம் அறக்கட்டளையின் 106 ஏக்கர் நிலம் யாவும் விரைவில் கையளிக்க வேண்டியது அரசின் கட்டாய கடனாகும். என அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி இவ்விடயத்தில் உடன் அக்கறை எடுத்துச் செயற்பட வேண்டும் என்றும் அவர் வேண்டுதல் விடுத்துள்ளார். (இ

கலாசார பேரவை கூட்டம் வெள்ளியன்று

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ். பிரதேச கலாசார பேரவையின் நிர்வான சபைக் கூட்டம்நாளை மறுதினம்வெள்ளிக்கிழமைபிற்பகல்3மணிக்கு பிரதேசசெயலர் எஸ். சுதர்சன் தலைமையில்பிரதேசசெயலக மண்டபத்தில் நடைபெறும்.

கலாசார அபிவிருத்திச் செயற்றிட்டம் 2019 இற்கான கலை மன்ற அபிவிருத்தி, பிரதேசகலைஞர்ஒன்றுகூடல், யாழ்பாடிமலர்வெளியீடு, கலைஞர் ஊக்குவிப்பு ஆடிப்பிறப்பு விழா, கலாசார விழா ஆகியவை பற்றிய கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன.

நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவரையும் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (இ-19)

மின் தடை

யாழ்ப்பாணம், மார்ச் 20

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்க ளின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழன் காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை -

யாழ் பிரதேசத்தில் -

காங்கேசன்துறை, மயிலிட்டி, தையிட்டி, வறுத்தலைவிளான், வீமன்காமம், பலாலி, காங்கேசன்துறை கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், காங்கேசன்துறை வடக்கு கடற்படை முகாம், பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், பலாலி இலங்கை விமானப்படை முகாம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம் (புதியது), பலாலி விமானப்படை ஓய்வு கால விடுதி ஆகிய இடங்களிலும் -

கிளிநொச்சி பிரதேசத்தில் -

வட்டக்கச்சி, இராமநாதபுரம்பன்னங்கண்டிAquaculture Development வட்டக்கச்சி SLAF Camp I இரணைமடு, SLAF Camp II இரணைமடு, Agriculture training Centre ஆகிய இடங்களிலும்

வவுனியா பிரதேசத்தில்-

பட்டாணிச்சூர் கிராமம், ஆண்டியப்புளியங்குளம் ஆகியபிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப் பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ

ஜெனீவா தீர்மானத்துக்கு அனுசரணை வழங்காதீர்!

கூட்டு எதிரணி தலைவர்கள் ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

நாட்டுக்கு எதிரான ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் கொண்டு வரவுள்ள தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கவுள்ள நாடுகளின் தூதுவர்களுடன், ஜனாதிபதி முக்கிய கலந்துரையாடலை மேற்கொள்ள வேண்டும் என்றும், இணை அனுசரணை வழங்கும் விடயத்தில் இருந்து முழுமையாக விலகிக் கொள்ளவேண்டும் என்றும் வலியுறுத்தி, கூட்டு எதிரணியின் தலைவர்கள், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

. அரசமைப்புத் திருத்தத்தை மறுசீரமைப்பு செய்தலைக் கண்காணித்தல், இராணுவம், பொலிஸ் பிரிவினருக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுத்தல், அதிகாரப்பகிர்வு தொடர்பிலான விடயங்களை நிறுவுதல், பாதுகாப்புத் துறையின் சட்டத் திட்டங்களை நீக்குதல், திருத்தல், இராணுவத்தினருக்கு எதிரான நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்தல், சர்வதேச நீதிபதிகளின் தலையீட்டை ஏற்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இணை அனுசரணை வழங்குவதாக குறிப்பிட்ட பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்நிலையிலே இராணுவத்தினர் மற்றும் முக்கிய பொலிஸ் தரப்பினர் குறிப்பிட்ட நாடுகளுக்குச் செல்வதற்கு அந்த நாடுகளில் தடைகள் விதிக்கப்பட்டன. இந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்ற நாம் முற்படும்போது நாட்டின் சுய இறைமையை விட்டுக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

நாட்டுக்கு எதிராக முன்னெடுக்கப் படும் தீர்மானங்களில் இருந்து விடுபடவேண்டியது அவசியமாக்கப்பட் டுள்ளது. இவ்விடயத்தில் தாங்கள் நேரடிக் கவனம் செலுத்த வேண்டும்.

இம்முறை இடம் பெறும் ஐ.நா. மனித உரிமை கவுன்ஸிலில் இணையனுசரணை வழங்குவதாகக் குறிப்பட்ட பிரேரணையில் இருந்து விலகிக் கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். எமது நாட்டுக்கு எதிராகப் பிரே ரணைகளை முன்வைக்க தீர்மானித் துள்ள நாடுகளின் தூதுவர்களுடன் கலந்துரையாடல்களை முன்னெடுப்பது அவசியமாகும் – என்றுள்ளது.

இந்தக் கடிதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்தன, இலங்கை கம்யூனிசக் கட்சியின் தலைவர் ராஜா கொளுரே, சமசமாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ விதாரண, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, இலங்கை மக்கள் கட்சியின் தலைவர் அசங்க தவரத்ன, தேச விமுக்தி ஜனதா பெரமுனவின் தலைவர் டி. கலங்சூரிய, இடதுசாரிக் கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார, பொதுஜன பெரமுனவின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் கையெழுத்திட்டனர். (ஐ)

இணை அனுசரணை முடிவு மாற்றமில்லை

வெளிவிவகார அமைச்சு திட்டவட்டம்

கொழும்பு, மார்ச் 20

ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கு வதில் எந்த மாற்றமும் கிடையாது என்று வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை அரசின் நிலைப்பாடு பற்றிய அறிக்கையை இன்று வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன தலைமையிலான குழு பேரவை அமர்வில் சமர்ப்பிக்கவுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன், கலாநிதி சரத் அமுனுகம, வட மாகாண ஆளுநர் சுரேன் ராகவன், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரவிநாத் ஆரியசிங்க, பிரதி சொலிசிற்றர் ஜெனரல் ஏ.நெரின் புள்ளே ஆகியோர் ஜெனீவா அமர்வில் இலங்கையின் சார்பில் பங்கேற்கின்றனர்.

இந்த நிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் தீர்மானத்துக்கு இணை அனு சரணை வழங்கும் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் கிடையாது என்று வெளிவிவகார அமைச்சு வட்டா ரங்கள் தெரிவித்தன. (ஐ)

பஸ் விபத்தில் 13 மாணவர் காயம்

கொழும்பு, மார்ச் 20

கல்விச் சுற்றுலாவுக்காக, பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற தனியார் பஸ் ஒன்று, அம்பலாந்தோட்டை - தெஹிகாலந்த பகுதியில், இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 13 மாணவர்கள் சிறுகாயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

காலி மஹிந்த வித்தியாலய மாணவர்களே, இவ்வாறு விபத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த விபத்தில் ஆசிரியர்கள் இருவரும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளனரென பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

தவக் காலச் சிந்தனை

பெற்றோரே முன்மாதிரிகள்

குடும்பம் குதூகலமாக வேண்டும் என்ற ஆவல் எல்லோர் மனங்களிலும் ஏற்பட குடும்பத் தலைவனின் பொறுப்பும் மனைவி பிள்ளைகளின் பங்களிப்பும் மிக முக்கியமானது. இயேசுவின் ஆன்மீக வழிகாட்டலும் திருக்குடும்பத்தின் திகழ்ந்த தூய யோசேப்புவின் வாழ்வும் பல சவால்களுக்கு மத்தியில் ஏற்பட்டதே. உழைப்பு, நேர்மை, உண்மை, பிரமாணிகம் பொறுப்பான தந்தையாக இறைவார்த்தையை மனதார ஏற்றதால், அவரது வாழ்வு, வரலாற்றுப் பதிவில் சிறந்த வளர்ப்புத் தந்தையாகப் போற்றப்படுகிறார்.

தொழிலாளராகப் போற்றப்படும் தூய யோசேப்பு தன் குடும்ப பொறுப்பில் தன் குடும்ப பங்கேற்புடன் தொழிலாளரின் முன்மாதிரியாக வாழ்ந்தவர். எதிர்கொண்ட சவால்கள் பலவாக இருந்த போதும் மரியாளையும் இயேசுவையும் தனது வாழ்வியலில் இறை வார்த்தைக்கு முன்மாதிரியாக வாழ்வின் மூலம் பெற்றோரே பிள்ளைகளின் முன்மாதிரியாகவும் தொழிலாளர்கள் பாதுகாவலராகவும் இறை திட்டத்தை ஏற்று நடத்தும் வழிகாட்டியாகவும் திருச்சபையின் முக்கிய பொறுப்பு வாய்ந்த புனிதராக எமக்கு தரப்பட்டுள்ளார். நீதி, நேர்மையோடு வாழ்ந்த வழிகாட்டி வாழ்வில் இறை பற்றுறுதியோடு ஆன்மிக பயணத்தைத் தொடர்வோம்!

- செ.யோசப்பாலா -

யாருக்கு வெற்றி?

மத்தியில் பா.ஜ.க. கூட்டணிக்கே! தமிழகத்தில் தி.மு.க.கூட்டணிக்கு!

அ.தி.மு.க. அணி தேறுவது கஷ்டம் என்கின்றன கருத்துக் கணிப்புகள்

மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. கூட்டணிக்கு 283 இடங்களும், காங்கிரஸ் கூட்டணிக்கு 135 இடங்களும் கிடைக்கும். தமிழகத்தில் தி.மு.க. கூட்டணி 34 இடங்களில் வெற்றி பெறும் என 'டைம்ஸ் நவ்' கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது.

மக்களவைத் தேர்தலை முன்னிட்டு 'டைம்ஸ் நவ்' தொலைக்காட்சியும் வி.எம்.ஆர்.சேர்வே நிறுவனமும் இணைந்து நாடு முழுவதும் பரவலாக 16,931 பேரிடம் கருத்துக் கணிப்பை நடத்தின. இதன் முடிவுகள் நேற்று முன்தினம் இரவு வெளியிடப்பட்டன. அதில் கூறப்பட்டுள்ளதாவது:-

புல்வாமா பயங்கரவாதத் தாக்குதல் மற்றும் பாகிஸ்தானில் இந்திய இராணுவம் நடத்திய தாக்குதலுக்குப் பிறகு, பா.ஜ.கவுக்கு தேசிய அளவில் ஆதரவு பெருகியுள்ளது.

மக்களவைத் தேர்தலில் மொத்தம் உள்ள 543 தொகுதிகளில் பா.ஜ.க. கூட்டணி 283 இடங்களையும், காங்கிரஸ்கூட்டணி 135 இடங்களையும், மற்ற கட்சிகள் 125 இடங்களையும் பிடிக்கும்.

உத்தரப் பிரதேசத்தின் 80 தொகுதிகளில் பா.ஜ.க. 42 இடங்களையும், சமாஜ்வாதி - பகுஜன் சமாஜ்கூட்டணி 36 இடங்களையும், காங்கிரஸ் 2 இடங்களையும் கைப்பற்றும்.

குஜராத்தின் 26 தொகுதிகளில் பாஜக 24 இடங்கள், காங்கிரஸ் 2 இடங்களைப் பிடிக்கும். ராஜஸ்தானின் 25 தொகுதிகளில் பா.ஜ.க. 20 இடங்கள், காங்கிரஸ் 5 இடங்களைப் பிடிக்கும். டெல்லியில் 7 தொகுதிகளையும் பா.ஜ.க. கைப்பற்றும். ஜம்மு காஷ்மீரின் 6 தொகுதிகளில் 4 இடங்களை ஜம்மு காஷ்மீர் தேசியக் கட்சியும், 2 இடங்களை பா.ஜ.கவும் பிடிக்கும்.

தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களில் பா.ஜ.க. கூட்டணி குறைந்த இடங்களிலே வெற்றி பெறும். தமிழகத்தில் மொத்தம் உள்ள 39 தொகுதிகளில் 34 இடங்களில் தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெறும். 5 இடங்களில் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி வெற்றி பெறும். புதுச்சேரி தொகுதியில் காங்கிரஸ் வெற்றி பெறும்.

கேரளாவில் உள்ள 20 தொகுதிகளில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி 16 இடங்களையும், பாஜக கூட்டணி ஓர் இடத்தையும் பிடிக்கும்.

ஆந்திராவில் உள்ள 25 தொகுதிகளில் 22 தொகுதிகளை வை.எஸ்.ஆர். காங்கிரஸும், 3 இடங்களை தெலுங்கு தேசமும் கைப்பற்றும். காங்கிரஸ், பா.ஜ.கவுக்கு ஓர் இடம் கூட கிடைக்காது. தெலங்கானாவில் மொத்தம் உள்ள 17 இடங்களில் காங்கிரஸ் ஓர் இடம், பா.ஜ.க. 2 இடங்கள், டிஆர்எஸ் கட்சி 13 இடங்களைப் பிடிக்கும்.

கர்நாடகாவின் 28 தொகுதிகளில் 13 இடங்களில் காங்கிரஸ், 15 இடங்களில் பா.ஜ.க. வெற்றி பெறும். - இவ்வாறு கருத்துக் கணிப்பு முடிவில் கூறப்பட்டுள்ளது.

கோவா அரசியலில் திடீர் திருப்பம் பா.ஜ.கவின் புதிய முதல்வர் தெரிவு

பதவி ஏற்றுக்கொண்ட பிரமோத் சாவந்த்துக்கு ஆளுநர் மிருதுளா சென் பதவிப்பிரமாணம் செய்த காட்சி

குழப்பங்கள், சமாதானங்கள் ஆகியவற்றுக்குப் பின் நேற்று அதிகாலை 2 மணிக்கு கோவா மாநிலத்தின் புதிய முதல்வராக பா.ஜ.கவின் பிரமோத் சாவந்த் பதவியேற்றார்.

கோவா சட்டப்பேரவையின் சபாநாயகராக இருந்த பிரமோத் சாவந்த் முதல்வர் பதவியேற்கும் முன் தனது சபாநாயகர் பதவியை ராஜினாமா செய்தார்.

முதல்வர் பிரமோத் சாவந்துடன் சேர்ந்து, மகாராஷ்டிராவாடி கோமந்தக் கட்சியின் தலைவர் சுதின் என்ற ராமகிருஷ்ண தாவில்கர், கோவா பார்வேர்ட் கட்சியின் தலைவர் விஜய் சர்தேசாய் ஆகியோர் துணை முதல்வராகப் பதவியேற்றனர்.

மனோகர் பாரிக்கர் முதல்வராக இருந்தபோது துணை முதல்வர்கள் பதவி இல்லை. ஆனால், சில தினங்களுக்கு முன்னர் பாரிக்கர் காலமானமையை அடுத்து முதல்வர் பதவிக்கான பேரம் நடந்தது. அதில் துணை முதல்வர் பதவி இருவருக்கு வழங்க. இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்த இரு கட்சிகளின் ஆதரவுடன்தான் மாநிலத்தில் பா.ஜ.க .ஆட்சியில் இருந்து வருகிறது. மனோகர் பாரிக்கர் இறந்தவுடன் இரு கட்சிகளைச் சேர்ந்த தாவில்கர், சர்தேசாய் முதல்வர் பதவி கேட்டு முரண்டு செய்தார்கள். இவர்களை சமாதானப்படுத்தி, இருவரையும் துணை முதல்வர்களாக நியமித்துள்ளது பா.ஜ.க.

திங்கள் இரவு 11 மணிக்கு தொடங்குவதாக இருந்த பதவியேற்பு விழா பல்வேறு தாமதங்கள், கடைசிநேரப் பேச்சுகள் ஆகியவற்றால. நேற்று அதிகாலை 2 மணிக்கு நடந்தது. மனோகர் பாரிக்கர் அமைச்சரவையில் இருந்த அத்தனை பேரும் மீண்டும் அமைச்சர்களாகப் பொறுப்பேற்றுக்கொண்டனர்.

(உ)

கமலின் கட்சி வேட்பாளர்கள் பட்டியல் இன்று வெளியாகும்

ராமநாதபுரத்தில் அவர் போட்டி?

மக்களவைத் தேர்தல் மற்றும் சட்டப்பேரவை இடைத்தேர்தலில் கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம் தனித்துப் போட்டியிடுகிறது. 1,300 இற்கும் மேற்பட்டோர் தேர்தலில் போட்டியிட விருப்ப மனுக்களைத் தாக்கல் செய்தனர்.

அவர்களிடம் நேர்காணல் நடத்தப்பட்டு, வேட்பாளர்களும் தெரிவு செய்யப்பட்டு விட்டனர் எனக் கூறப்படுகிறது.

வேட்பாளர்கள் பட்டியல் இன்று வெளியிடப்படும் என்று கட்சித் தலைவர் கமல்ஹாசன் அறிவித்துள்ளார். இதைத் தொடர்ந்து வரும் 24ஆம் திகதி கோவை கொடீசியா வளாகத்தில் வேட்பாளர் அறிமுகக் கூட்டம் நடக்க உள்ளது.

பா.ஜ.க. போட்டியிடும் ராநாதபுரம், கோவை, கன்னியாகுமரி, சிவகங்கை, தூத்துக்குடியில் முக்கிய வேட்பாளர்களைக் களமிறக்க கமல் திட்டமிட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.

இவற்றில், ஏதாவது ஒரு தொகுதியில் கமல்ஹாசன் போட்டியிட உள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. குறிப்பாக, ராமநாதபுரத்தில் போட்டியிட அதிகம் வாய்ப்பு உள்ளதாகக் கூறப்படுகிறது.

நடிகர் நாசர் மனைவி கமீலா நாசர் மத்திய சென்னை தொகுதியிலும், நடிகை ஸ்ரீபிரியா திருவாரூர் தொகுதியிலும், கவிஞர் சிநேகன் சிவகங்கை தொகுயிலும் போட்டியிட வாய்ப்பு உள்ளதாகவும் மக்கள் நீதி மய்யம் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

தம்முடன் சேர்ந்து முன்னர் 'தர்மயுத்தம்' நடத்திய விசுவாசிகளைக் கைவிட்டார் ஓ.பன்னீர்செல்வம்!

அ.தி.மு.கவில் சசிகலா தலைமையை எதிர்த்து துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்துடன் சேர்ந்து 'தர்மயுத்தம்' நடத்திய அவரது ஆதரவு எம்.பிக்கள் 10 பேரில் ஒருவருக்குக்கூட மீண்டும் 'சீட்' (வேட்பாளர் நியமனம்) வழங்காதமை பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு, முதல்வராக இருந்த ஓ.பன்னீர்செல்வம்(ஓபிஎஸ்) பதவி விலக சசிகலா தரப்பு நெருக்கடி கொடுத்தது. இதில் அதிருப்தி அடைந்த ஓபிஎஸ், முதல்வர் பதவியை ராஜினாமா செய்து விட்டு அ.தி.மு.கவில் சசிகலாவுக்கு எதிராக 'தர்மயுத்தம்' தொடங்கியுள்ளதாக அறிவித்தார். அப்போது அவருக்கு பக்கபலமாக 10 எம்.பி.க்கள் நின்றனர்.

சசிகலா சிறைக்குச் சென்றதால், அவரால் முதல்வராக்கப்பட்ட எடப்பாடி கே.பழனிசாமி (ஈபிஎஸ்) பிறகு ஓபிஎஸ்ஸை அழைத்துக் கொண்டார். ஓபிஎஸ் துணை முதல்வர் ஆனார். அவரது ஆதரவாளர்களுக்கும் கட்சியில் பொறுப்பு கள் வழங்கப்பட்டன.

ஈபிஎஸ் - ஓபிஎஸ் இருவரும் ஒரே அணியாக நின்று சசிகலாவையும், டிடிவி தினகரனையும் ஓரங்கட்டினர். கட்சியின் பெயர் மற்றும் 'இரட்டை இலை' சின்னத்தை ஈபிஎஸ் - ஓபிஎஸ் அணிக்கே தேர்தல் ஆணையம் வழங்கியது. கட்சி ஒருங்கிணைப்பாளராக ஓபிஎஸ், துணை ஒருங்கிணைப்பாளராக ஈபிஎஸ் பொறுப்பேற்றனர்.

கட்சியின் முக்கியப் பொறுப்பில் இருக்கும் ஓபிஎஸ், இத்தேர்தலில் தன்னுடன் நெருக்கடி காலத்தில் நின்ற ஆதரவாளர்களுக்குக் கணிசமான இடங்களை வாங்கிக் கொடுப்பார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அவரது ஆதரவு எம்.பி.க்கள் 10 பேரில் ஒருவருக்குகூட மீண்டும் 'சீட்' வழங்கப்படவில்லை. மாறாக, ஓபிஎஸ் உட்பட பல அமைச்சர்கள், எம்.எல்.ஏக்களின் வாரிசுகளுக்குத்தான் சீட் வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து அ.தி.மு.க. மூத்த நிர்வாகிகள் சிலர் கூறியவை வருமாறு:-

அ.தி.மு.கவின் 37 எம்.பி.க்களில் 27 பேர் ஈபிஎஸ் அணியினர்; 10 பேர் ஓபிஎஸ் அணியினர். இதில், ஈபிஎஸ் அணியை சேர்ந்த தம்பிதுரை (கரூர்) டாக்டர் வேணுகோபால் (திருவள்ளூர்), டாக்டர் ஜெயவர்தன் (தென் சென்னை), மரகதம் குமரவேல் (காஞ்சிபுரம்), மகேந்திரன் (பொள்ளாச்சி), செஞ்சி சேவல் ஏழுமலை (ஆரணி) ஆகிய 6 பேருக்கு மட்டுமே மீண்டும் 'சீட்' வழங்கப்பட்டுள்ளது.

ஓபிஎஸ் அணியை சேர்ந்த சுந்தரம் (நாமக்கல்), அசோக்குமார் (கிருஷ்ணகிரி), சத்தியபாமா (திருப்பூர்), வனரோஜா (திருவண்ணாமலை), கோபாலகிருஷ்ணன் (மதுரை), செங்குட்டுவன் (வேலூர்), மருதராஜா (பெரம்பலூர்), ஜெயசிங் தியாகராஜ நட்டார்ஜி (தூத்துக்குடி), பார்த்திபன் (தேனி) உள்ளிட்ட 10 பேரில் ஒருவருக்குக் கூட மீண்டும் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

விழுப்புரம் எம்.பி. ராஜேந்திரன் விபத்தில் இறந்துவிட்டார். அவரது குடும்பத்தில் ஒருவருக்கு 'சீட்' வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. அதுவும் வழங்கப்படவில்லை.

ஏற்கெனவே, தனது தம்பிக்கு ஆவின் தலைவர் பதவி வாங்கித் தந்த ஓபிஎஸ், தற்போது அவரது மகனுக்கு 'சீட்' கிடைத்தால் போதும் என்று, ஆதரவாளர்களை -விசுவாசிகளை - கைவிட்டு விட்டார். - இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

கொங்கோவில் மிக மோசமான ரயில் விபத்து 32 பேர் சாவு: எழுபது பேர் வரைப் படுகாயம்

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவில் ஏற்பட்ட மிக மோசமான ரயில் விபத்தில், 32 பேர் பலியாகினர். எழுபதுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

இது குறித்து கொங்கோ ரயில்வே துறை, "காசை மாகாணத்தில் உள்ள பினா லேகாவில் ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட ரயில் விபத்தில் 32பேர் பலியாகினர். பலியானவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுவர்கள்.எழுபதுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன" – என்று தெரிவித்துள்ளது. கொங்கோவில் ரயில்வேப் பாதைகள் மற்றும் கருவிகள் சீராகப் பராமரிக்கப்படாமையினால் அடிக்கடி அங்கு மோசமான விபத்துகள் ஏற்பட்டு வருகின்றன.

தற்போதைய விபத்தில் தடம்புரண்ட ரயில் பெட்டிகள் ஆறு ஒன்றுக்குள் வீழ்ந்தன எனக் கூறப்படுகிறது. மீட்புப் பணிகள் தொடக்கின்றன என்றும் இதனால் பலியானோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகின்றது என்றும் கூறப்பட்டது.

ரயில் விபத்து ஏற்பட்டதற்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாக கொங்கோ அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் கொங்கோவில் ஏற்பட்ட மூன்றாவது ரயில் விபத்து இதுவாகும். கடந்த மாதம் கேலண்டாவில் ஏற்பட்ட ரயில் விபத்தில் 5 பேர் பலியாகினர்.

நெதர்லாந்திலும் தீவிரவாதி துப்பாக்கிச் சூடு; மூவர் சாவு!

ஐந்து பேர் வரைப் படுகாயம்

நெதர்லாந்தின் யூட்ரெக்ட் நகரத்தில், ஒரு டிராமில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மூவர் உயிரிழந்த நிலையில், இதற்கு காரணமான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திங்கட்கிழமை காலைநடைபெற்ற இந்தத் துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் 5 பேர் காயமடைந்தனர். அதில் சிலருக்கு மோச மான காயங்கள் ஏற்பட்டுள்ளன.

37 வயதான கோக்மென் டானிஸ் என்ற அந்த துருக்கி நாட்டு நபர் துப்பாக் கிச் சூட்டுச் சம்பவம் நடந்த இடத்தில் இருந்து 3 கிலோமீற்றர் தொலைவில் இருந்த ஒரு கட்டடத்தில் சம்பவம் நடந்த பல மணி நேரங்களுக்குப்பின்னர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட தாக்குதல்தாரியின் நோக்கம் என்னவென்று தெளிவாகத் தெரியவில்லைஎன்றுபொலிஸ்அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) நடந்த இந்தத் துப்பாக்கிச்சூட்டைத் தொடர்ந்து யூட்ரெக்ட் நகரம் முழுவதும் தீவிர தேடுதல் வேட்டை நடைபெற்றது. மேலும். நகரில் இருந்த கல்வி நிலை யங்கள் உடனடியாக மூடப்பட்டன.

திங்கட்கிழமையன்று உள்ளூர் நேரப்படி காலை 10:45 மணிக்கு, 24 அக்டோபர்ப்ளேன் ஜங்ன் என்ற இடத்தில் இந்த சம்பவம் நிகழ்ந்தது. உடனடியாகப் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

சம்பவ இடத்திற்கு மூன்று ஹெலிகொப்டர்கள் அனுப்பி வைக்கப்பட்டன. மேலும், யூட்ரெக்ட் நகரம் முழுவதும் டிராம் சேவை நிறுத்தி வைக்கப்பட்டது.

சதுக்கத்தில் அதிகாரிகள் உடனே குவிந்தனர். அங்கு அவசர சேவைகளும் வரவழைக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் குறித்து மிகுந்த கவலை கொள்வதாக தெரிவித்த அந் நாட்டு பிரதமர் மார்க் ருட்டே, இந்த வாரத் தில் நடைபெற இருந்த கூட்டணி பேச்சுக் களை ரத்து செய்தார்.

ஒரு ஆள் துப்பாக்கியை எடுத்து கொடூரமாக சுடத் தொடங்கினார் எனச் சம்ப வத்தை நேரில்பார்த்தவர் டச்நியூஸ்வலைதளத்திடம் தெரிவித்தார்.

திங்கள்கிழமையன்று நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில், இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒரு தீவிரவாத செயலாக இருக்கக்கூடும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

தாக்குதல்தாரியான சந்தேகநபர் கோக்மென் டானிஸ் யாரென்று நெதர்லாந்து நாட்டு பொலிஸார் அறிந்துள்ளனர் என்று அவர் மேலும் கூறினார்.

ஓர் உள்ளூர் தொழிலதிபர், சந்தேக நபரான கோக்மென் டானிஸ் முன்பு செச்சன்யா குடியரசில் நடந்த போராட்டங்களில் பங்குபெற்றவர் என்று கூறினார்.

இஸ்லாமிய அரசு என்று அழைக்கப்படும் ஐ.எஸ். குழு உள்பட பல ஜிஹாதி குழுக்கள் செச்சன்யா பகுதியில் மிகவும் தீவிரமாக இருந்தன என அவர் கூறினார்.

" ஐ.எஸ். குழு வுடன் தொடர்பு இருந்ததாக கோக் மென் டானிஸ் முன்பு கைது செய்யப்பட்டார். பின் னர் அவர் விடுதலை செய்யப்பட் டார்" என்று அத் தய் தொழிலதிபர் மேலும் கூறினார்.

அர்ச்சனா வெல்டிங் வேக்ஸ்
அனைத்து விதமான
வெல்டிங் வேலை களும் உரிய
தவணையில் செய்து
தரப்படும்.
தொடர்புகளுக்கு –
சூட்டி (0769495917)
கொக்குவில்.

வாடகைக்கு தேவை
நல்லூரில் வசிக்கும் சிறிய குடும்பம் ஒன்றிற்கு அரியாலை மாம்பழம் சந்திக்கு அண்மையாக வீடு வாடகைக்கு தேவை.
தொடர்புகளுக்கு:
077 603 0787

நியூஸிலாந்து துப்பாக்கிச் சூடு:

ஆஸியில் சர்ச்சைக்குரிய கருத்துத் தெரிவித்த எம்.பியை முட்டையால் அடித்த இளைஞன்!

நியூஸிலாந்தில் மசூதியில் முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு குறித்து சர்ச்சைக் குரிய விதத்தில் கருத்து தெரிவித்த வலதுசாரி நாடாளுமன்ற உறுப்பினரை முட்டையால் இளைஞன் அடித்த சம்பவம் நடந்துள்ளது.

நியூஸிலாந்தில் கிறைஸ்ட்சேர்ச் நகரில் உள்ள அல்நூர் மசூதி மற்றும் லின்வுடன் பகுதியில் உள்ள மசூதிகளில் கடந்த வெள்ளிக்கிழமையன்று முஸ்லிம்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு வந்த மர்ம நபர்கள் தாங்கள் வைத்திருந்த துப்பாக்கியால் கண்மூடித்தனமாக சுட்டுக் கொன்ற னர். இதில் 50 பேர் பலியாகினர். இதில் 7 பேர் இந்தியர்கள். ஏராளமா னவர்கள் காயமடைந்து ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தத் துப்பாக்கிச் சூட்டில் முக்கியக் குற் றவாளியான பிரெண்டன் டாரன்ட் கைது செய்யப்பட்டு அவரிடம் விசாரணை நடந்து வருகிறது.

இந்நிலையில் இந்தத் துப் பாக்கிச்சூடு குறித்து ஆஸ்திரேலிய வலதுசாரி நாடாளுமன்ற உறுப்பினர் பிரேசர் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று செய்தியாளர்களிடம் பேசினார்.

அவர் பேசும்போது, முஸ்லிம்களை நியூஸிலாந்தில் அனுமதித்ததால்தான் அது கடுமையான சூழலைச் சந்தித்திருக்கிறது என்ற தொனியில் சர்ச்சையான கருத்தைப் பதிவு செய்தார்.

அவர் இந்தக் கருத்தைச் சொன்னதும் அருகில் இருந்த 17 வயது இளைஞன் ஒருவன் கையிலிருந்த முட்டையால் அவர் தலையில் அடித்தான். இதனைச் சற்றும் எதிர்பாராத பிரேசர் இளைஞனைத் தாக்கினார்.

இந்த வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகப் பரவி வருகிறது. (உ)

VIP
CCTV
077-3767899
30%
விலைக்கழிவு

ஐ.நா. மனித உரிமை ஆணையரின்

இலங்கை பற்றிய அறிக்கையிலுள்ள விடயங்கள் என்ன?

• எஸ்.வி.கிருபாகரன்.

ஐ.நா மனித உரிமை ஆணையாளரினால் கடந்த 8 ஆம்திகதிஜெனீவாவில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை பற்றிய அறிக்கை (A/HRC/40/23) இலங்கை அரசிற்கு பல இறுக்கமான செய்திகளுடனான பல வேண்டுகோள்களை முன் வைத்துள்ளது.

இந்த அறிக்கை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு பல விதங்களில் சில நம்பிக்கை ஊட்டும்செய்திகளைக்கூறுகிறது.

இந்த அறிக்கைக்கும் ஐ.நா மனித உரிமை சபையில் 40 ஆவது கூட்டத்தொடரில் கொண்டுவரவிருக்கும் தீர்மானத்திற்கும் பல தொடர்புகள் இருந்த பொழுதிலும், தீர்மானம் என்பது மனித உரிமை சபையில் நாற்பத்தி ஏழு (47) நாடுகளின் சிந்தனையில், முடிவுகளில் தங்கியுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆணையாளரின் அறிக்கை பதினைந்து பக்கங்களையும் எழுபத்தி இரண்டு பந்திகளையும் கொண்டுள்ள அதேவேளை, ஐந்து பிரிவுகளையும் கொண்டுள்ளது.

இந்த ஐந்து பிரிவுகளும் முன்னுரை, இலங்கை அரசுடனான சமரசம்/தொடர்பு, பொறுப்புக்கூறல் அரசியல் தீர்வு பற்றிய முன்னேற்றம், மற்றைய மனித உரிமை விடயங்கள், முடிவுரையும் சிபாரிசுகளென பிரிக்கப்பட்டுள்ளன.

இவ் அறிக்கையானது 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையிலானது என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐந்து பந்திகளைக் கொண்டுள்ள முன்னுரையைத் தொடர்ந்து இலங்கை அரசுடனான தொடர்பு/ சமரசம் என்ற பிரிவுநான்குபந்திகளைக்கொண்டுள்ளது.

இப் பிரிவில் 2015ஆம் ஆண்டு முதல் மொத்தமாக எட்டு ஐ.நா வின் விசேடபிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர் என்றும் இதே காலப்பகுதியில் ஐ.நா மனித உரிமை கண்காணிக்கும் ஏழு குழுக்களும், ஐ.நா பூகோள ஆய்வும் இலங்கையை பரிசீலித்துள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மூன்றாவது பிரிவான பொறுப்புக்கூறல், அரசியல் தீர்வு ஆகியவற்றின் முன்னேற்றம் என்ற பிரிவு நாற்பத்தி ஒரு பந்திகளை உள்ளடக்கியுள்ளது.

இப்பிரிவில் கடந்த ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் இலங்கை நாடாளுமன்றத்தில் நடைபெற்ற சர்ச்சைகளை குறிப்பிட்டு இறுதியில் அங்கு ஜனநாயகம் நிலை நாட்டப்பட்டது.

அடுத்து இலங்கையில் நிலை மாற்று நீதி (Transitional Justice) என்பது மிகவும் குறைந்த முன்னேற்றம் காணப்படும் காரணத்தினால் பாதிக்கப்பட்டோர் இதில் நம்பிக்கை இழந்துள்ளனர்.

அங்கு காணாமல் போனோர் பற்றிய காரியாலயம் உருவாக்கப்பட்டதை பாராட்டும் ஆணையாளர், பாதிக்கப்பட்ட பலர் இக்காரியாலயம் பற்றி முழு நம்பிக்கையும் கொள்ளவில்லையெனக் கூறுகிறார்.

பாதிக்கப்பட்டோரது குடும்பத்தினர் காணாமல் போயுள்ள தமது உடன் பிறப்புக்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்களா அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது? என்பதை அறிய ஆவலாக உள்ளார்கள் எனவும் இதனால் இக்காரியாலயம் இக்குற்றங்களை இழைத்தோரை இனம் காணவோ வழக்குத் தொடரவோ முடியாத காரியாலயமாக பாதிக்கப்பட்ட குடும்பங்கள், உறவினர்கள் பார்க்கின்றனர்.

இப் பிரிவில் மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்ட புதை குழிகள் பற்றி குறிப்பிடும் வேளை, அங்கு முன்னூறு (300) க்கு மேற்பட்ட எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

ஸ்ரீலங்காவை பொறுத்தவரையில் பொறுப்புக்கூறல் விடயத்தில் உள்நாட்டில் எந்தவித முன்னேற்றமும் காணப்படவில்லை என்பது மிகவும் அழுத்தம் திருத்தமாகக் கூறப்பட்டுள்ளது.

அரசியல் தீர்வு விடயத்தில் மிகக் குறுகிய சில முன்னேற்றம் காணப்படுவதாகவும் கடந்த ஒக்டோபர் மாதம் இடம் பெற்ற நிகழ்வுகளைத் தொடர்ந்து யாவும் ஸ்தம்பித நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது

இவ் ஆணையாளரின் அறிக்கை பயங்கரவாதச் சட்டம் திருத்தி அமைப்பதில் உள்ள தடங்கல்கள், அத்துடன் இலங்கை மீண்டும் மரண தண்டனையைக் கொண்டு வருவதற்கு முயற்சிப்பதைக் கண்டித்துள்ளது.

2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25ஆம் திகதி ஸ்ரீலங்காவினால் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம், பயங்கர வாதச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் ஐம்பத்தி எட்டு (58) வழக்குகள் நடைபெறுகின்றன. இன்னும் மூவர் மீது வழக்குத் தாக்கல் செய்வதற்கு தயார் செய்யப்பட்டு வருகிறது.

இலங்கையின் புள்ளி விபரங்களுக்கு அமைய எழுபத்தி ஐந்து (75%) வீதமான காணிகளை திரும்பக்கொடுத்துள்ள போதிலும் அங்கு சொத்துகள் சூறையாடப்பட்ட வழக்குகள் உள்ளன. குடியேற்றங்கள் தனியார் காணிகள் பறிக்கப்படுதல், இராணுவம் தொடர்ந்து வர்த்தகத்தில் ஈடுபடுதல் போன்ற விடயங்களும் இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அங்கு முன்பு நடைபெற்ற பல படுகொலைகள், காணாமல் போயுள்ளவர்கள் பற்றி ஒழுங்கான விசாரணையோ நீதியோ பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுக்கப்படவில்லை என இங்கு மிகவும் அழுத்தம் திருத்தமாக பெயர், சம்பவத் திகதி ஆகியவற்றுடன் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவங்கள் 2008 க்கும் 2009ஆம் ஆண்டிற்கும் இடையில் கொழும்பில் காணாமல் போயுள்ள பதினொரு பேருடைய வழக்கு, 2017ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட இருபத்தி ஏழு (27) பேரது சம்பவம்.

2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வெலிவேரியவில் ஊர்வலம் செய்தவர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம், 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர்களது சம்பவம்.

2006ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் சம்பவம், 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் காணாமல் போயுள்ள ஊடகவியலாளர் பிரகீத் ஏக்னலி கொடவின் சம்பவம்.

2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் லசந்த விக்கிரமதுங்கவின் சம்பவம் ஆகியவற்றுடன் 2018 ஆம் ஆண்டு மார்ச் 5ஆம், 8ஆம் திகதிகளில் கண்டியில் முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்ற இனக்கலவரம், 2018 ஆண்டு ஜனவரி மாதம் எவஞ்சலிக்கல் கிறிஸ்தவ தேவாலயம் தாக்கப்பட்ட 86 சம்பவங்கள் இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவின் நியமனம், இராணுவ முன்னாள் அதிகாரி ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய பிறேசில் கொலம்பியாவில் சர்வதேச நீதி விசாரணைக்கு எடுக்கப்பட்ட விடயம் உட்பட பல விடயங்கள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ்அறிக்கையில் சிவில் சமூகத்தில் ஒருபகுதியினர் இலங்கையை ஐ.நா பாதுகாப்புச் சபைக்கும் சர்வதேச நீதி மன்றத்திற்கும் அனுப்பிவைக்க வேண்டியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ் ஆணையாளரின் அறிக்கை வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைத்த வரப்பிரசாதமாக ஐ.நாவின் அவதானிகள், புத்திஜீவிகள், கல்விமான்கள், அனுபவம்மிக்க மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் கருதுகின்றனர். *

> ஸ்ரீ லங்காவை பொறுத்த வரையில் பொறுப்புக் கூறல் விடயத்தில் உள்நாட்டில் எந்தவித முன்னேற்றமும் காணப்படவில்லை என்பது மிகவும் அழுத்தம் திருத்தமாகக் கூறப்பட்டுள்ளது.
>
> அரசியல் தீர்வு விடயத்தில் மிகக் குறுகிய சில முன்னேற்றம் காணப்படுவதாகவும் கடந்த ஒக்டோபர் மாதம் இடம் பெற்ற நிகழ்வுகளைத்தொடர்ந்துயாவும் ஸ்தம்பித நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

வசந்த கரன்னகொடவிடம் 4 மணி நேரம் விசாரணை

கொழும்பு, மார்ச் 20

கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட சுமார் நான்கு மணி நேர விசாரணைகளின் பின்னர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து வெளியேறினார்.

நேற்றுக் காலை 3ஆவது தடவையாகவும் முற்பகல் 9.30 மணியளவில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் அவர் முன்னிலையானார்.

இதன்போது சுமார் 4 மணித்தியாலங்கள் அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டது. அதன் பின்னர் அவர் அங்கிருந்து வெளியேறினார்.

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட வழக்கில், 14ஆவது சந்தேகநபராகச் சேர்க்கப்பட்டுள்ள அட்மிரல் வசந்த கரன்னகொட, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தன்னைக் கைது செய்யக்கூடும் என்பதால் தலைமறைவாகியிருந்தார்.

தன்னைக் கைது செய்வதற்கு குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்குத் தடை விதிக்கக் கோரி அவர் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்திருந்தார்.

எனினும் உயர்நீதிமன்றம், அட்மிரல் கரன்னகொடவைக் கைது செய்ய இடைக்காலத் தடை விதித்ததுடன், அவரைக் குற்றப்புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகும் படி அழைப்பாணை அனுப்பியிருந்தது.

நீதிமன்ற உத்தரவின் பேரில் இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் அவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்தார். (ஐ)

பிரேரணை வரைவில் திருத்தம் கூடாது!

24 உறுப்பு நாடுகளிடம் கூட்டமைப்பு கோரிக்கை

ஜெனீவா, மார்ச் 20

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை வரைவில் எத்தகைய திருத்தங்களையும் அனுமதிக்கக்கூடாது என்று, பிரேரணை வரைவுக்கு இணை அனுசரணை வழங்க முன் வந்துள்ள 24 நாடுகளின் பிரதிநிதிகளிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதி அருட்தந்தை எஸ்.ஜே. இம்மானுவேல் ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை பொறுப்புக்கூறல் பொறிமுறையைக் கால அட்டவணையுடன் கூடிய வகையில் முன்னெடுக்கும் வகையில் சர்வதேசம் அழுத்தம் பிரயோகிக்கப்படவேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

ஜெனீவாவுக்குச் சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் உலகத்தமிழர் பேரவையின் பிரதிநிதி அருட்தந்தை எஸ்.ஜே.இம்மானுவேல் ஆகியோர் நேற்றுமுன்தினம் ஜெனீவா வளாகத்தில் பிரிட்டன் தலைமையிலான இலங்கை பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்க முன்வந்துள்ள 24 நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடினர்.

உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதி சுரேன் சுரேந்திரனும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டார். இதன்போதே மேற்கண்ட கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இது குறித்து சுமந்திரன் எம்.பி. தெரிவிக்கையில் –

நேற்று முன் தினம் காலை உறுப்பு நாடுகளுடன் ஒரு சந்திப்பு இடம்பெற்றது. பலர் வந்திருந்தனர். பிரேரணை வரைவு பலப்படுத்தப்படவேண்டும் என்றும் கால அட்டவணை ஒன்று இணைக்கப்படவேண்டுமென்றும் நாம் கேட்டோம். இலங்கை இணை அனுசரணை வழங்கவேண்டுமென்றும் அதிலிருந்து இலங்கையை விலகவிடக்கூடாதென்றும் வலியுறுத்தினோம். இதையே நண்பகலில் சந்தித்த ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தினரிடமும் கூறியிருக்கிறோம். ஏற்கெனவே வெளியிடப்பட்ட பிரேரணை வரைவை இலங்கை மீறாமல் பார்த்துக் கொள்வது தமது கடமை என்று உறுப்பு நாடுகள் வாக்குறுதி அளித்தன – என்றார். (ஐ)

இலங்கை — ஆப்கன் நேரடி விமான சேவை!

கொழும்பு, மார்ச் 20

இலங்கையுடன் நேரடி விமான சேவை ஒன்றை நடத்த ஆப்கானிஸ்தான் அழைப்பு விடுத்துள்ளது.

ஆப்கானிஸ்தான் தூதுவர் எம்.அஸ்ரப் ஹைதாரி, அமைச்சர் ரிஷாட் பதியுதீனை சந்தித்த போதே இந்த அழைப்பை விடுத்ததோடு இலங்கையுடன் முதலீட்டு பாதுகாப்பு மற்றும் ஊக்குவிப்பு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டு இருதரப்பு பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதற்கும் விருப்பம் வெளியிட்டுள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஆப்கானிஸ்தான் தனது அயல் நட்புறவு நாடுகளுடனும் பிராந்தியத்துக்கு அப்பாலும் விமான சேவையை நடாத்தி உள்ளூர் உற்பதி பொருள்களை எடுத்துச் சென்றது.

இதன் விளைவாக 2018 ஆம் ஆண்டு 1பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உற்பத்திப்பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. அதே போன்று இலங்கை உடனும் புதிய நேரடி விமான சேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கு நாங்கள் விரும்புகின்றோம்.

இந்த விமான சேவையானது கடந்த காலங்களை போன்று டில்லி , மும்பை வழியாக செல்லாமல் நேரடியாக காபூலில் இருந்து கொழும்புக்கு தரையிறங்கும் வகையில் நடத்தப்படல் வேண்டும். என்றும் ஆப்கானிஸ்தான் தூதுவர் தெரிவித்தார்.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது ஆப்கானிஸ்தான் தூதுவர் மேலும் தெரிவித்ததாவது –

உத்தேச விமான சேவை ஆரம்பிக்கப்பட்டால் விசேட குறைந்த தீர்வையை வழங்குவதற்கும் தரையிறங்குவதற்கான உரிமையை வழங்குவதற்கும் ஆப்கானிஸ்தான் தயாராக இருக்கின்றது. என அவர் தெரிவித்தார்.

காபூலை தளமாக கொண்ட விமான சேவைகளான அரியானா ஆப்கன் எயார் லைன்ஸ், காம் எயார் ஆகிய விமானங்கள் கொழும்புக்கு பறப்பதற்கு தயாராக இருக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானுடனான ஏற்றுமதி நடவடிக்கைகளை இலங்கை ஏற்றுமதியாளர்கள் திறம்படச் செய்தால், ஆப்கானிஸ்தானின் புதிய சந்தைகளில் பிரமாண்டமான வர்த்தக வாய்ப்புகளை இலங்கை ஏற்படுத்த முடியுமெனவும் இலங்கை கம்பனிகள் ஆப்கானிஸ்தான் சுரங்க கனிம இருப்புக்களை அகழ்வதற்கான சந்தர்ப்பமும் ஏற்படுமெனவும் அமைச்சர் ரிஷாத் தெரிவித்தார். (ஐ)

மதில்களில் போஸ்டர்களை ஒட்டுவோர் மீது சட்டம் பாயும்

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில்உள்ளவீடுகள்–கட்டடங்களின் மதில்களில் விளம்பர சுவரொட்டிகளை ஒட்டுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட் அறிவித்துள்ளார்.

விளம்பரச் சுவரொட்டிகளை விளம்பரப்பலகைகளில் மட்டுமே ஒட்ட முடியும் எனக் குறிப்பிட்டுள்ள அவர், மேலதிகமாக விளம்பரப் பலகைகள் தேவைப்படுவோர் விண்ணப்பித்தால் இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் விளம்பரங்களை காட்சிப்படுத்தும் நிறுவனங்கள், பொது அமைப்புக்கள், தனியார் வர்த்தக நிறுவனங்கள், சினிமா திரையரங்குகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசியல் கட்சிகள் தமது விளம்பரங்களை பொது மதில்கள், பொதுச் சுவர்கள், வீட்டுச் சுவர்கள் மற்றும் பொதுக் கட்டடங்களின் சுவர்களில் ஒட்டினால் (காட்சிப்படுத்தினால்) அந்த நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற மாநகர சபையின் அறிவுறுத்தலை உரியோர்களுக்கு மிகுந்த மனவருத்தத்துடன் அறியத்தருகின்றேன்.

விளம்பரங்களை ஒட்டுவோர் தமது விளம்பரங்களை உரிய விளம்பரப் பலகையில் மாத்திரம் ஒட்ட முடியும் என்பதுடன், தங்களின் விளம்பரங்களுக்கு மேலதிக விளம்பரப்பலகை தேவையெனில் மாநகரசபையில் விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அதற்கான இட ஏற்பாடுகள் செய்து தரப்படும் என்பதை தெரியப்படுத்துகின்றேன்.

வேறு எந்த பொது இடங்களிலும் விளம்பரங்களை ஒட்டாது மாநகரின் மாண்பையும், அழகையும் பேணிப்பாதுகாத்து சுத்தமான பசுமை மாநகராக உருவாக்குவதற்கு தங்களின் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் – என்றுள்ளது. (ஐ)

8 ஆயிரத்து 500 பட்டதாரிகளுக்கு விரைவில் ஆசிரியர் நியமனம்!

கொழும்பு, மார்ச் 20

8500 பட்டதாரிகளை இவ்வருடத்தில் ஆசிரியர்களாக நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாகக் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் வேலையில்லாப் பட்டதாரிகள் அதிகரித்துள்ளமை குறித்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

பட்டதாரிகளுக்கு அரச தொழில் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 500 பேரை இணைத்துக் கொள்ளவுள்ளதாகவும் அதனைத் தொடர்ந்துதேசியபாடசாலைகளுக்காக மேலும் 3500 ஆசிரியர்களை இணைக்கத் தீர்மானித்துள்ளார் எனவும் அகிலவிராஜ் காரியவசம் மேலும் கூறினார். (ஐ)

மகேந்திரனை ஒப்படைப்பதில் சிங்கப்பூர் அரசு ஆமை வேகம்!

ஜனாதிபதி மைத்திரி கடும் அதிருப்தி

கொழும்பு, மார்ச் 20

மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய முக்கியநபரான அர்ஜுன் மகேந்திரனை, இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைப்பதில் இழுத்தடிப்பு இடம்பெற்றுவருகின்றது. இது விடயத்தில் சிங்கப்பூர் அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இலஞ்ச, ஊழலை ஒழிக்கும் ஐந்தாண்டு செயற்திட்டத்தை வெளியிடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் முற்பகல் கொழும்பில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

2015 ஜனவரி 08ஆம் திகதி 62 இலட்சத்து 50 ஆயிரம் மக்களின் வாக்குகளின் மூலம் ஜனாதிபதி பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட தனது தேர்தல் விஞ்ஞாபனத்தின் முக்கிய விடயமாக அமைந்திருந்தது ஊழல், மோசடிகளை ஒழிப்பதாகும்.

அதற்காக கடந்த நான்கு வருட காலப்பகுதியில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன். அவற்றில் எந்தவொரு அரசாங்கமும் மேற்கொள்ளாத பல்வேறு தீர்மானங்கள் அடங்கியுள்ளன.

வரலாற்றில் இடம்பெற்ற பெரும் கொள்ளையான மத்திய வங்கி பிணை முறிமோசடி தொடர்பாக கண்டறிவதற்கு நான் நியமித்த ஜனாதிபதி ஆணைக் குழுவானது, ஆணைக்குழுக்கள் பற்றி அதுவரையில் மக்கள் மத்தியில் இருந்து வந்த நம்பிக்கையீனம் மற்றும் பின்னடைவான கருத்துக்களை மாற்றியமைத்தது.

நல்லாட்சி எண்ணக்கருவினுள் ஒரு நாடு என்ற வகையில் முன்னேறிச் செல்வதற்குள்ள முக்கிய சவாலாக ஊழல், மோசடிகள் இருக்குமானால் அதனை ஒழிப்பதற்கு நாட்டை நேசிக்கின்றஅனைத்துதரப்பினரும் ஒன்றுபட வேண்டும்.

இலஞ்ச, ஊழலை ஒழிப்பதற்கு தெளிவான நிகழ்ச்சித்திட்டமொன்று நாட்டில்நடைமுறைப்படுத்தப்பட்டபோதும் குற்றவாளிகளுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பிரச்சினை உள்ளது.

சிறந்த அரச சேவையின் மூலம் இலஞ்ச, ஊழல் இல்லாத சிறந்ததோர் நாட்டை கட்டியெழுப்புவதற்கு ஊழல், மோசடிகளுக்கு எதிராக தண்டனை வழங்குதல் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பாக பொறுப்புகூற வேண்டிய அர்ஜுன மகேந்திரனுக்கு எதிராக சர்வதேசப்பிடியாணைபிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, அவரை இலங்கையிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு சிங்கப்பூர் பிரதமரிடம் தனிப்பட்ட ரீதியில் கோரிக்கை விடுத்திருந்தேன்.

உரியநடவடிக்கைஎடுக்கப்படும்என எனக்கு உறுதிவழங்கப்பட்டது. ஆனால், அதற்கான நடவடிக்கை துரிதகதியில் இடம்பெறுவதாக தெரியவில்லை.

இதுவிடயத்தில்சிங்கப்பூர்அரசுகூடுதல்கவனம்செலுத்தவில்லை. ஒருஅறிவிப்பைகூட வெளியிடவில்லை. இது கவலையளிக்கின்றது–என்றார். (ஐ)

51ஆவது ஹட்ரிக் கோல் அடித்து அசத்திய மெஸ்சி

லா லிகா உதைபந்து தொடரில் மெஸ்சியின் ஹட்ரிக் கோலால் பார்சிலோனா அணி 4:1 என்ற கோல் கணக்கில் ரியல் பெட்டிஸ் அணியை வீழ்த்தியது.

ஆர்ஜென்ரீனாவின் பிரபல உதைபந்து வீரர் லயோனல் மெஸ்சி, பார்சிலோனா கிளப் அணியில் விளையாடி வருகிறார். பார்சிலோனா - ரியல் பெட்டிஸ் இடையிலான போட்டி நடைபெற்றது.

இந்தப் போட்டியில் மெஸ்சி அபாரமான ஆட்டத்தை'வெளிப்படுத்தினார். ஆட்டத்தின் 18ஆவது நிமிடத்தில் முதல் கோலை 'ப்ரீ ஹிக்' மூலம் அடித்த மெஸ்சி, 45+2ஆவது நிமிடத்தில் 2ஆவது கோலை பதிவு செய்தார்.

இதன்மூலம் பார்சிலோனா அணி முதல் பாதி நேரத்தில் 2:0 என முன்னிலைப் பெற்றிருந்தது. பின்னர் 2ஆவது பாதியில் 63ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணியின் மற்றொரு வீரர் சுவாரஸ் ஒரு கோல் அடித்தார்.

அதனைத் தொடர்ந்து, 82ஆவது நிமிடத்தில் ரியல் பெட்டிஸ் அணி வீரர் லோரென் மொரோன் கோல் அடித்தார். பரபரப்பான இந்த ஆட்டத்தின் 85ஆவது நிமிடத்தில் மெஸ்சி 3ஆவது கோல் அடித்தார்.

இறுதியில் பார்சிலோனா அணி 4:1 என்ற கோல் கணக்கில் ரியல் பெட்டிஸ் அணியை வீழ்த்தியது. இப்போட்டியில் மெஸ்சி அடித்த ஹட்ரிக் கோல், அவருக்கு 51ஆவது ஹட்ரிக் கோல் ஆகும்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் ஆப்கன் முதல் வெற்றி!

ஆப்கானிஸ்தான் மற்றும் அயர்லாந்து அணிகளுக்கிடையிலான ஒரேயொரு டெஸ்ட் போட்டியில், ஆப்கானிஸ்தான் அணி 7 விக்கெட்டுகளால் அபார வெற்றி பெற்றுள்ளது.

இதுவே ஆப்கானிஸ்தான் அணி, டெஸ்ட் கிரிக்கெட்டில் பெற்றுக்கொண்ட முதல் வெற்றியாக பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தியாவின் -உத்ரகாண்ட் மைதானத்தில் கடந்த 15ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அயர்லாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.



இதன்படி களமிறங்கிய அயர்லாந்து அணி, முதல் இன்னிங்ஸிற்காக 172 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டமாக டிம் முர்டாக் ஆட்டமிழக்காது 54 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

பந்து வீச்சில் யாமின் அஹமட்ஸாய் மற்றும் மொஹமட் நபி ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், ரஷித்கான் மற்றும் வகார் சலாம்கெய்ல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து, பதிலுக்கு முதல் இன்னிங்ஸை தொடங்கிய ஆப்கானிஸ்தான் அணி, 314 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக ராஹமட் சஹா 98 ஓட்டங்களையும், அஸ்கர் ஆப்கான் 67 ஓட்டங்களையும், ஹஸ்மதுல்லா சாயிடி 61 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் ஸ்டுவர்ட் தொம்ப்ஸன் 3 விக்கெட்டுகளையும், எண்டி மெக்பிரைன், ஜேம்ஸ் கெமரூன் டவ், ஜோர்ஜ் டொக்ரில் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து, 142 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய அயர்லாந்து அணி, 288 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதனால், ஆப்கானிஸ்தான் அணிக்கு 147 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக என்ரிவ் பல்பிரைன் 82 ஓட்டங்களையும், கெவீன் ஓ பிரைன் 56 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் ரஷித்கான் 5 விக்கெட்டுகளையும், யாமின் அஹமட்ஸாய் 3 விக்கெட்டுகளையும், வகார் சலாம்கெய்ல் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

147 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணி, 3 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை கடந்தது.

இதில் ராஹமட் சஹா 78 ஓட்டங்களையும், இஷானுல்லாஹ் ஜெனட் ஆட்டமிழக்காது 65 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் எண்டி மெக்பிரைன், ஜேம்ஸ் கெமரூன் டவ், ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஆப்கானிஸ்தான் அணி சார்பில், இரண்டு இன்னிங்ஸுகளிலும் அரைசதத்தை கடந்த ராஹமட் சஹா தெரிவுசெய்யப்பட்டார்.

பாகிஸ்தானை புறக்கணிப்பதில் தவறில்லை!

உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணியைப் புறக்கணித்து 2 புள்ளிகளை இழப்பதில் தவறில்லை என இந்திய அணியின் முன்னாள் வீரர் கௌதம் கம்பீர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாகிஸ்தானுக்கு எதிரான இறுதிப் போட்டியை இந்தியா புறக்கணித்தால், ஒட்டு மொத்த மக்களும் அதற்கு ஆதரவளிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

புல்வாமா தாக்குதலையடுத்து உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தானுடன் இந்தியா விளையாடக் கூடாது என்ற கோரிக்கை வலுத்தது. இந்திய கிரிக்கெட் சபையும், வீரர்களும் இந்திய அரசு எடுக்கும் முடிவுக்கு கட்டுப்படுவோம் என்று தெரிவித்தனர்.

இது குறித்து கம்பிர் கூறுகையில் “பாகிஸ்தானுக்கு எதிராக நிபந்தனையற்ற தடை விதிக்க முடியாது என்பதை நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இதுகுறித்து இந்திய கிரிக்கெட் சபை முடிவு எடுக்க வேண்டியது அவசியம்.

பாகிஸ்தானுக்கு எதிரான உலகக்கிண்ணப் போட்டியை புறக்கணிப்பது கடினம் என்பது என்னால் உறுதியாகக் கூறமுடியும். ஆனால், நாம் பாகிஸ்தானுக்கு எதிராக இரு நாடுகளுக்கும் இடையிலான தொடரில் விளையாடுவதில்லை. அதேபோல் ஆசியக் கிண்ணத்திலும் விளையாடாமல் இருக்க முடியும். இது சிறந்த முடிவாகும்.

இதேவேளை, பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் விளையாடாமல் இரண்டு புள்ளிகளை இழப்பதில் எந்தத் தவறும் இல்லை. 40 உயிர்களை இழந்திருப்பது மிகவும் முக்கியமானது.

என்னுடைய பார்வையில், பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா விளையாடாது என்று முடிவு எடுத்துவிட்டால், ஒட்டுமொத்த நாட்டு மக்களும் அணிக்கு ஆதரவாக இருக்க வேண்டும். இறுதிப் போட்டியில் பாகிஸ்தானுடன் மோதவேண்டும் என்றாலும், அதைப் புறக்கணிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

பாகிஸ்தானுடன் இந்தியா ஆடித்தான் ஆக வேண்டும்

ஐ.சி.சி. அதிரடி அறிவிப்பு

உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தானுடனான போட்டியில், உடன்படிக்கையின்படி இந்திய அணி விளையாடித்தான் ஆக வேண்டும் என ஐ.சி.சி திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

காஷ்மீரின் புல்வாமா பகுதியில் நடந்த தீவிரவாத தாக்குதலில், இந்திய துணை ராணுவப் படை வீரர்கள் நாற்பதுக்கும் மேற்பட்டோர் பலியாகினர். இச்சம்பவம் அதிர்வலைகளை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து, உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணியுடனான போட்டியை இந்திய அணி புறக்கணிக்க வேண்டும் என்று கண்டன குரல்கள் எழுந்தன.

இதுதொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படாத நிலையில், இந்தியக் கிரிக்கெட் சபை மத்திய அரசின் முடிவுக்காக காத்திருக்கிறது. இதற்கிடையில் ஐ.சி.சிக்கு எழுதிய கடிதத்தில், தீவிரவாதம் உருவாகும் நாடுகளுடன் மற்ற நாடுகள் கிரிக்கெட் ஆடக் கூடாது என கேட்டுக் கொண்டது.

இந்நிலையில், உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தானுடனான லீக் போட்டியில் இந்தியா விளையாடியே தீரும் என்ற பாணியில் ஐ.சி.சி தலைமை அதிகாரி டேவ்ரிச்சர்ட்சன் கருத்துதெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், 'ஐ.சி.சி தொடர்களில் பங்கேற்க அனைத்து நாடுகளும் உறுப்பினர் பங்கேற்பு உடன்படிக்கையில் கையெழுத்து இட்டுள்ளனர். அதன்படி, ஒரு தொடரின் அனைத்து போட்டிகளிலும் அவர்கள் பங்கேற்க வேண்டும்' என தெரிவித்துள்ளார்.

ஒருவேளை இந்த உடன்படிக்கைபடி ஒரு நாடு நடந்து கொள்ளவில்லை என்றால், எதிரணிக்கு இரண்டு புள்ளிகள் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.



கிழக்கை அதிர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்ப சங்கத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்தப் பேரணியில் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளருமான க.வீ.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், ஞா.ஸ்ரீநேசன், இலங்கைத் தமிழரசுக் கட்சி செயலாளர் துரைராஜசிங்கம், மட்டக்களப்பு தமிழ் இளைஞர்கள் சமூக அமைப்பு மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சி வாலிபர் முன்னணி உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

வடக்கு - கிழக்கில் உள்ள சகல பிரதேசங்களிலும் இருந்தும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் இருந்து பல ஆயிரக்கணக்கான மக்கள், இளைஞர்கள் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியவாறு காந்தி பூங்கா வரை பேரணியாகச் சென்றனர். அங்கு கவன ஈர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமக்கான நீதியை இந்த அரசு வழங்கும் என்ற நம்பிக்கை தற்போது சிறிதும் இல்லை எனவும், தமக்கான தீர்வைச் சர்வதேசம் தலையீடு செய்வதன் மூலமே பெற்றுக்கொள்ள முடியும் எனவும் இந்தப் பேரணியில் பங்கேற்ற காணாமற்போனோரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

இந்த அரசால் ஏமாற்றப்பட்டு வருவதாகவும் எவ்வாறாயினும் தமக்கு நீதி கிடைக்கும் வரை தொடர்ச்சியான போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

கிழக்கு நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தியும் கிழக்கு மாகாணத்தில் நேற்றுக் கடையடைப்பு முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய போராட்டம் காரணமாக கிழக்கு மாகாணம் முற்றாக ஸ்தம்பித்தது.

மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களின் தமிழ்ப் பிரதேசங்களில் பாடசாலைகளுக்கு மாணவர்கள் சமுகமளிக்கவில்லை. அத்துடன், அரச அலுவலகங்கள், அரச, தனியார் வங்கிகளும் இயங்கவில்லை.

மேலும், வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. பாதுகாப்புக் கடமைகளில் பொலிஸார் ஈடுபட்டனர்.

இதேவேளை, கிழக்கு உறவுகளுக்கு ஆதரவாகக் கிளிநொச்சி வர்த்தகர்கள் கடையடைப்பை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணத்திலும் பல இடங்களில் சந்தைகள், கடைகள் மூடப்பட்டன. திருநெல்வேலி, சுன்னாகம், வடமராட்சிப் பகுதிகளில் கடையடைப்பு நடந்தது.

அத்துடன் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களிலும் கடையடைப்பு போராட்டம் இடம்பெற்றது. (ஐ)

மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் அதிகளவான பொது நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் என்பன பூட்டப்பட்டிருந்தன.

எனினும் பொது போக்குவரத்து வழமை போன்று இயங்கியதைக் காண முடிந்தது. ஆனால் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களின் சில பகுதிகளில் வழமை போன்று இயல்பு நிலையில் இயங்கியன பொது நிறுவனங்கள் வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தன. (ஐ)

சிக்கினார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் குரலென விசாரணைகளில் தெரியவந்துள்ளதால் பாதுகாப்புத்துறை வட்டாரங்களில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த விவகாரம் குறித்து இதுவரை இரண்டு தடவைகள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு வாக்குமூலம் வழங்கியுள்ளார் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர.

கொலைச்சதி முயற்சியை அம்பலப்படுத்திய நாமல் குமாரவைப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக்கவுக்கு அறிமுகப்படுத்தியவர் பூஜித் என்றே சொல்லப்படுகிறது.

இந்நிலையில் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் மா அதிபர் தொடர்ந்து அழைக்கப்பட்டால் அடுத்த கட்ட நடவடிக்கை அவருக்கெதிரான பாரதூரமான வகையில் இருக்குமென உயர் மட்ட பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன. (ஐ)

ஐ.நா. மனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாடப்பட்டது.

ஜெனீவாவில் நேற்று இடம்பெற்ற ஒரு பக்க நிகழ்வொன்றின் போது இந்தச் சந்திப்பு நடந்தது.

இது குறித்து சுமந்திரன் தெரிவிக்கையில் –

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருடன் இலங்கை விடயமாக உரையாடினேன். அவரது அறிக்கைக்காக எமது மக்களின் நன்றிகளைத் தெரிவித்தேன். நாளைக்கு (இன்று) அந்த அறிக்கையைத்தான் சமர்ப்பிப்பார் என்று அவர் கூறினார். இன்றைய அமர்வில் இலங்கை விவகாரம் பேசப்படும். அதன்பின்னர் நாளை பிரேரணை நிறைவேற்றப்படும் – என்றார். (ஐ)

அன்னை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு அலுவலகத்தில் நேற்று நடந்தது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் அன்னை பூபதியின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பிணர்கள் மலர்தூவி அஞ்சலித்தினர்.

யாழ். நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கமைய 83 ஆயிரத்து 432 அமெரிக்க டொலர்களை, யாழ் மாநகர முதல்வரிடம் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் வழங்கினார்.

வறிய மக்களின் பாதுகாப்புத் திட்டங்களுக்கான மானிய உதவித்திட்டத்தின் ஊடாகவே இந்த நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அகிரா சுகியாமா மற்றும் யாழ். மாநகர முதல்வர் இமானுவேல் ஆனல்ட் ஆகியோருக்கிடையில் நேற்றுக் கைச்சாத்திடப்பட்டது.

கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதுவரின் இல்லத்தில் இதற்கான நிகழ்வு நடைபெற்றது.

சுகாதாரமான சூழலை மேம்படுத்துவதற்காக இந்த திட்டத்தினூடாக ஜப்பானிடமிருந்து யாழ். மாநகர சபை நான்கு கழிவு சேகரிப்பு ட்ரக் வண்டிகளைப் பெற்றுக் கொள்ளவுள்ளது.

மீள்புதுப்பிக்கப்பட்ட இந்த ட்ரக் வண்டிகளை ஜப்பானில் இருந்து இலங்கைக்கு அன்பளிப்புச் செய்யும் நடவடிக்கைகளை ஜப்பானிய இராஜதந்திரத்தை ஊக்குவிப்பதற்கான சங்கம் முன்னெடுக்கவுள்ளது. (ஐ)

முஜிபூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதாளக் குழுக்களுடன் எனக்குத் தொடர்பு இருப்பதாக, சமூக வலைத்தளங்களில் பரவும் போலிச் செய்திகளால், எனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளேன். இந்த விடயம் குறித்து, எதிர்வரும் நாள்களில் நாடாளுமன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றுவதற்கு நான் தீர்மானித்துள்ளேன் – என்றார். (ஐ)

ஏமாற்றிவிட்டார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டோர் குடும்பசங்கத்தின் தலைவி அ.அமலநாயகி தெரிவித்தார்

மட்டக்களப்பு மாவட்டத்தின் காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்பங்களின் சங்க ஏற்பாட்டில், நேற்று நடத்தப்பட்ட பேரணியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இறுதிப் போரில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களை மீட்டுதரக்கோரி பல வருடங்களாக அவர்களது உறவுகள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்விடயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளவில்லை.

ஆனால் தற்போது, உள்ளூர்ப் பொறிமுறையில் அந்தப் பிரச்சினைக்கு தீர்வை முன்வைக்கப் போவதாக அவர் குறிப்பிட்டுள்ளமையானது பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

எமக்கான நீதியை இந்த அரசு வழங்கும் என்ற நம்பிக்கை சிறிதளவும் இல்லை. ஆகவே சர்வதேசத் தலையீடு ஊடாகவே எங்களது பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் –என்றார். (ஐ)

பிரிட்டனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற குற்றச்சாட்டில் அவரது மனைவி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இரவு 11.50 மணியளவில், கத்தியால் குத்தப்பட்டு இலங்கையர் தனது வீட்டில் உயிரிழந்துள்ளார்.

பிரிட்டனின் நோர்போல்க் பகுதியில் வாழ்ந்த, கடை உரிமையாளரான ராஜசிங்கம் குமாரதாஸ் என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இரவு 11.50 மணியளவில் சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார், தலை மற்றும் நெஞ்சுப் பகுதியில் கடும் காயங்களுக்குள்ளாகி ஆபத்தான நிலையில் இருந்த நபரை மீட்டுள்ளனர். காயமடைந்தவரை உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிப்பதற்குப் பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டனர். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் 54 வயதான அவரது மனைவி, ஜெயமலர் குமாரதாஸ் கைது செய்யப்பட்டுப் பொலிஸாரின் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை தாம் ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

2008ஆம் ஆண்டு குமரதாஸ் மற்றும் அவரது மனைவி 195,000 பவுண்ட் செலவில் கொள்வனவு செய்த 3 படுக்கையறை கொண்ட வீட்டைப் பொலிஸார் தங்கள் பொறுப்பில் எடுத்துள்ளனர்.

இலங்கையரான குமாரதாஸ் சொந்தமான சுப்பர் மார்க்கெட் ஒன்றையும் நடத்தி வந்துள்ளார்.

சம்பவத்திற்கான காரணத்தை ஆராய்ந்து வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

இன்று கடும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாறும் வளிமண்டலவியல் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் நிலவும் கடும வறட்சி காரணமாக ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளமையுடன், குடிதண்ணீரைப் பெருவதிலும் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர். (ஐ)

ஜெனீவாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிதாக வரவுள்ள பிரேரணை வரைவில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு இலங்கை அரச தரப்பு கடும் முயற்சியில் இறங்கியுள்ளது என்ற தகவல் சுமந்திரனின் காதில் எட்டியுள்ளது.

இதனையடுத்து அந்தப் பிரேரணை வரைவில் எந்தவொரு மாற்றமும் மேற்கொள்ளப்படக்கூடாது என ஜெனீவாவிலிருந்தவாறு பிரதமர் ரணிலுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எச்சரித்திருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன்.

இலங்கை அரச தரப்பின் சார்பில் இங்கிருந்து சென்ற வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன தலைமையிலான குழுவினரே இந்த முயற்சியில் இறங்கியிருந்தனர்.

இந்த முயற்சிக்கு உடனடியாகவே முற்றுப்புள்ளி வைக்கும் எத்தனத்தில் இறங்கியது கூட்டமைப்பு. இதனையடுத்து நேற்று தன்னைச் சந்தித்த உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளிடமும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகப் பிரதிநிதிகளிடமும் இந்த விடயம் குறித்துப் பேசினார் சுமந்திரன் எம்.பி.

எக்காரணம் கொண்டும் ஏற்கனவே வெளியிடப்பட்ட பிரேரணை வரைவில் மாற்றங்களை மேற்கொள்வதற்கு அனுமதிக்கக்கூடாது என்று அவர் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளிடம் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தினார்.

ஏற்கனவே வெளியிடப்பட்ட பிரேரணை வரைவை இலங்கை மீறாமல் பார்த்துக் கொள்வது தமது கடமை என்று உறுப்பு நாடுகள் இதன்போது வாக்குறுதி அளித்தன.

அதன் பின்னர் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சலெட் அம்மையாரை நேற்றுச் சந்தித்துப் பேசிய போதும் அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

இதனை அடுத்து சுமந்திரன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஜெனிவாவில் இருந்தவாறே தொலைபேசியில் தொடர்பு கொண்டு எச்சரித்தார். பிரேரணை வரைவில் அவ்வாறு மாற்றம் கொண்டுவர முயற்சிக்கவேண்டாம் என அவர் ரணிலிடம் கேட்டுக் கொண்டார்.

சுமந்திரன் எம்.பியின் எச்சரிக்கையை அடுத்து ஜெனீவாவிலுள்ள வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவைத் தொடர்பு கொண்ட பிரதமர் ரணில், இந்த விடயம் குறித்து பேசியுள்ளார்.

இதையடுத்து, உடனடியாக ஜெனீவா வளாகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனைச் சந்தித்த வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன, தாங்கள் பிரேரணையில் திருத்தத்தைக் கோரவில்லை என்று தெரிவித்தார் என அறிய முடிந்தது. (ஐ)

பெருந்தோட்டத் தொழிலாளர்களிடமிருந்து இ.தொ.காவுக்கு வருடாந்தம் 7 கோடி ரூபா!

தொழில் திணைக்களத்தின் விவரத்தில் அம்பலம்

கொழும்பு, மார்ச் 20

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களிடமிருந்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஏழு கோடியே எழுபத்தேழு இலட்சம் (77,751,933) ரூபாவை தொழிலாளர்களிடமிருந்து 2016 - 2017ஆம் ஆண்டு சந்தாப் பணமாகப் பெற்றுள்ளது.

அதேபோல, இலங்கை தேசிய தொழிலாளர் சங்கம் இரண்டு கோடியே இருபத்தி நான்கு இலட்சம் ரூபா (22,437,558.53), தேசிய தொழிலாளர் சங்கம் மூன்று கோடியே 45 இலட்சம் ரூபா (34, 524,328.41) என தொழிலாளர்களிடமிருந்து சந்தாப் பணமாக பெற்றுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களை அங்கத்தவர்களாகக் கொண்டிருக்கும் 6 தொழிற்சங்கங்கள் தொடர்பாக 'மாற்றம்' அமைப்பு தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக தொழில் திணைக்களத்தில் கோரியிருந்த தகவல்களின் அடிப்படையில் இந்த விடயம் அம்பலமாகியுள்ளது.

இது தொடர்பில் மாற்றம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

அங்கத்தவர்கள் எண்ணிக்கை, ஒரு தொழிலாளியிடமிருந்து பெற்றுக்கொள்ளும் சந்தாத் தொகை, தொழிற்சங்கங்கள் மாதாந்தம், வருடாந்தம் பெற்றுக்கொண்ட சந்தாப் பணம், ஓராண்டுக்கு தொழிற்சங்கங்கள் செலவழித்த தொகை, எதற்காக? கடந்த 3 வருடங்கள் மேற்கண்ட தொழிற்சங்கங்களால் கிடைக்கப்பெற்ற ஆண்டு கணக்கறிக்கை போன்ற விடயங்களடங்கிய தகவல் கோரிக்கை விண்ணப்பத்தை மாற்றம் நேரடியாகவே சென்று தொழில் திணைக்களத்தின் தகவல் அதிகாரியிடம் கையளித்திருந்தது.

கேட்கப்பட்ட கேள்விகளுள் சிலவற்றுக்கு மாத்திரம் பதில் (தெளிவற்ற விதத்தில்) கிடைத்துள்ளபோதிலும் ஒரு சில கேள்விகளுக்கு பதில் தரப்பட்டிருக்கவில்லை. அதற்கான காரணமும் குறிப்பிடப்படவில்லை. ஆனால், தொழிற்சங்கங்களின் ஆண்டுகணக்கறிக்கைகளைத் தொழில் திணைக்களம் தர மறுத்தது.

2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவல்களுக்கான உரிமைச் சட்டத்தின் 5(1) f பிரிவின் படி தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாமையை தங்களுக்குத் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று மேலதிக தொழில் ஆணையாளர் நாயகம் சி.என். விதனாச்சியின் கையெழுத்துடன் கூடிய பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனால் மேன்முறையீடு செய்யப்பட்டது. மேன்முறையீட்டின்போது கிடைத்த பதிலுக்கும் முதல் விண்ணப்பத்தின்போது கிடைக்கப்பெற்ற பதிலுக்கும் இடையே பெரிதாக வித்தியாசத்தை காணமுடியவில்லை.

தொழிற்சங்கங்களின் அங்கத்தவர்கள் விவரம், ஒரு அங்கத்தவரிடம் அறவிடும் மாதாந்த சந்தாப் பணம், ஒரு வருடம் பெற்றுக்கொண்ட சந்தாப் பணம் போன்ற தகவல்களை மாற்றத்தால் பெற்றுக்கொள்ள முடிந்தது.

தொழிற்சங்கங்களிடமிருந்து இறுதியாகக் கிடைக்கப்பெற்ற ஆவணங்களின் அடிப்படையில் உறுப்பினர் விவரங்களை கேட்டிருந்தோம். 2017ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்றஅறிக்கையைக்கொண்டே திணைக்களம் மாற்றத்துக்கு தகவல்களைத் தந்திருக்கிறது.

அதன்படி கிட்டத்தட்ட 4 இலட்சம் அங்கத்தவர்களை இலங்கை தொழிலாளர்காங்கிரஸ்கொண்டிருக்கிறது. இலங்கை தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கம் ஒன்றரை இலட்சம் அங்கத்தவர்களையும் தேசிய தொழிலாளர் சங்கம் 21 ஆயிரத்து 280 அங்கத்தவர்களையும் கொண்டிருக்கின்றன.

இப்போதுபெருந்தோட்டத்தில்ஒன்றரை இலட்சம் தொழிலாளர்களே வேலை செய்துவருகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுவரும் நிலையில் திணைக்களம் வசமிருக்கும் 3 தொழிற்சங்கங்களின் தொகை மட்டும் ஐந்தரை இலட்சத்தைத் தாண்டுகிறது.

நாம் பெற்றுக் கொண்ட தகவல்களின் அடிப்படையில் ஓர் ஆண்டுக்கு (01.04.2016 - 31.03.2017) இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஏழு கோடியே எழுபத்தேழு இலட்சம் (77,751,933) ரூபாவை தொழிலாளர்களிடமிருந்து சந்தாப் பணமாக பெற்றுள்ளது. அதேபோல, இலங்கை தேசிய தொழிலாளர் சங்கம் இரண்டு கோடியே இருபத்தி நான்கு இலட்சம் (22,437,558.53), தேசிய தொழிலாளர் சங்கம் மூன்று கோடியே 45 இலட்சம் (34,524,328.41) என தொழிலாளர்களிடமிருந்து சந்தாப் பணமாக பெற்றுள்ளது.

இந்தச் தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் சந்தாப் பணத்தில் மேற்கொள்ளும் செலவுகள் என்னவென்று முதல் விண்ணப்பத்தில் கோரியபோது பதில் வழங்கப்படாததால், மேன்முறையீட்டின்போது செலவுகளை உள்ளடக்கிய ஆண்டு கணக்கறிக்கையை மாற்றம் கேட்டிருந்தது. அதற்கு தகவல்களுக்கான உரிமைச் சட்டத்தின் 5(1) எவ் பிரிவின் படி தகவல் தரமுடியாது என்று தொழில் திணைக்களம் மறுத்துள்ளது.

இதனை எதிர்த்து மாற்றம் தகவல் அறியும் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யவுள்ளது. (ஐ)

தேவை

மரங்கள் வளர்ப்பதற்கு செம்மண் தேவை விலைக்கு வாங்கப்படும்.

தொடர்பு இலக்கம் — 077 8249949
021 221 7474

கண்ணீர் அஞ்சலி

வைரமுத்து றஞ்சன்

(பாலன்)

பிறப்பு
1961.01.27

இறப்பு
2019.03.14

அன்னாரின் மறைவால் வாடும்
குடும்பத்தினர்களுக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன்
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கெருடாவில்,
தொண்டமனாறு.

பொன்னபலம் பிரியதர்ஷன் (காலைக்கதிர் ஊழியர்)
குடும்பத்தினர், நவக்கரி.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி அவர்களது அச்சகத்தில் 20.03.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.